# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 41-ம் இலக்கம்


## சீனி, மா விற்பனை

கொழும்புப்பிரிவிலே சீனி, மா என்பனவற்றின் மொத்தவிற்பனை வருகிற தைமாதம் 1-ந்திகதியன்று தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து கூட்டுறவுஸ்தாபனங்களுக்கு மாற்றப்படும். இது விஷயம் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழிலும் அழைப்பிதழ்கள்

அரசாங்க வைபவங்களுக்கென பாராளுமன்றத் தமிழ்அங்கத்தவர்களுக்கும், மற்றும் தமிழ்ப்பிரமுகர்களுக்கும் அனுப்பப்படுகின்ற பிரதமர் காரியாலய அழைப்பிதழ்கள் இனிமேல் தமிழிலும் தொடர்ந்து அனுப்பப்பட்டுவரும். இதற்கானஏற்பாடுகளை அரசாங்க வெளிவிவகாரபகுதி செய்திருக்கின்றது.

## வாழ்க்கைச்செலவின் உயர்வு

வாழ்க்கைச்செலவுகள் உயர்ந்துகொண்டேபோவதால் அரசாங்கஉத்தியோகஸ்தர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்; அதனால் இந்தக்கஷ்டத்தைப்பற்றி நிதிமந்திரியிடம் முறையிடுவதென அகில—இலங்கை அரசாங்க உத்தியோகஸ்தர் தொழிற்சங்க மகாநாட்டின் ஆலோசனைக்கம்மிற்றி முடிவு செய்திருக்கிறது.

## புதியநெசவு நிலையங்கள்

இளைஞர்களுக்கும், இளம்பெண்களுக்கும நெசவுதொழிலில் பயிற்சியளிப்பதற்காகத் தற்போதுள்ள நெசவுநிலையங்களைவிட மேலும்நாற்பது நெசவுநிலையங்களை அடுத்தசிலமாதங்களில் திறப்பதற்குத் தாம்உத்தேசித்திருப்பதாக அரசாங்கஅதிபர் திரு. எம். ஸ்ரீகந்தா அவர்கள் நல்லூர்ச் சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் தெரிவித்திருக்கின்றார்.

## இடிமுழக்கமும் மழையும்

யாழ்ப்பாணத்திலே சென்றவெள்ளிக்கிழமைஇரவு பயங்கரஇடிமுழக்கத்துடனும், மின்னலுடனும் பெருமழை பெய்யலாயிற்று. அன்றிரவுஉண்டான பெரும்இடிமுழக்கத்தைப்போல ஒரு பயங்கர இடிமுழக்கத்தைத் தாங்கள் கேட்டதில்லையென்று காலங்கண்டவர்கள் கூறுகின்றார்கள். அத்தால்படுக்கையில் அயர்ந்துகிடந்த அனைவருமே திடுக்கிட்டெழுந்து உலகமேநடுங்குகிறதென்று திகில்கொள்ளலானார்கள். அன்றிரவும், அடுத்தநாளும்பெய்த கனத்தமழையாலே குளங்குட்டைகள் தண்ணீரால்நிறைந்து வயல்கள், பள்ளநிலங்களெல்லாம் வெள்ளத்தால்தேங்கின. வெள்ளிக்கிழமைஇரவு 11மணிவரையில் காங்கேசன்துறைவீதியிலே பெரியகடையிலுள்ள கட்டடஅறைஒன்றில்இருந்தஐவர் கூரைவழியாக அறைக்குள்இருந்த வானொலிப்பெட்டியைத்தாக்கிய மின்னலிலிருந்து தேவாதீனமாக உயிர்தப்பிக்கொண்டனர். அவர்களில்ஒருவரான அப்துல்மஜீத் என்பவர் மின்னலால் கடும்அதிர்ச்சியடைந்தார். அவர்உடனே அரசினர் பெரியஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

## தமிழிலும் அரசாங்க அறிக்கைகள்

அரசாங்கஅறிக்கைகள் எல்லாவற்றையும் தமிழிலும், சிங்களத்திலும் மொழிபெயர்த்து வெளியிடவேண்டுமெனத் திறைச்சேரியின் சுற்றுநிருபம் ஒன்று அரசாங்கபகுதிகளின் தலைவர்களைக் கேட்டிருக்கிறது. அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு அமையவே இந்தஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தச்சுற்றுநிருபம் சிங்களத்தில் அனுப்பப்பட்டிருப்பது தான் ஓர்விநோதமாகும்.

## புதிய சமாதானநீதிபதி

திரு. டபிள்யு. எம். ஜோசுவா அவர்கள் கூட்டுறவுவிளைபொருள் விற்பனைச் சங்கத்தின் தலைவராகக் கடந்தஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்துகடமையாற்றிப் புண்ணாலைக்கட்டுவன், ஏழாலை, மல்லாகம், அளவெட்டியெனும் கிராமங்களுக்குச் செய்துள்ள அருஞ்சேவைகளையும், மல்லாகப்பகுதிச் சமூகசேவாஊழியராக நன்குகடமையாற்றியதையும் நீதிமந்திரிபாராட்டி அவரை ஜே. பி. எனப்படும் சமாதானநீதிபதியாக நியமனஞ்செய்திருக்கின்றார்.

## 45பேரைக் கடித்த விசர்நாய்

வழியிலே தன்முன்எதிர்ப்பட்ட ஒவ்வொருவரையுமே விசர்நாய்ஒன்று சென்ற 12-ந்திகதிபகல் கடிக்கத்தொடங்கியபோது கிரிந்தைக்கும், யற்றியானைக்குமிடையிலுள்ள பன்னூற்றுக் கணக்கானகிராமவாசிகள் திகில்கொண்டு பெரிதும் திண்டாடினார்கள். அன்று ஒருநாளில் அது ஒருபெருந்தொகையான பாடசாலைப்பிள்ளைகள்உட்பட 45பேரைக் கடித்ததாகச் சொல்லப்படுகிறது. இவர்களெல்லாம் உடனேதானே மாத்தறைஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். அங்கே டாக்ளஸ் தேவசுரேந்திரஎனும்மாணவனின் நிலைமை மிகமோசமாயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஈற்றில் கிராமவாசிகளின்கூட்டமொன்று யற்றியானையிலே அந்தவிசர்நாயைத் தடிகள்கொண்டு அடித்துக்கொன்றது.

## டக்றர் எஸ். எவ். செல்லப்பா

இலங்கையின் முன்னைநாள் சுகாதாரசேவைத்தலைவரான டக்றர் எஸ். எவ். செல்லப்பாஅவர்கள் சென்ற 17-ந்திகதிஇரவு புதுடில்லியிலே காத்திராப்பிரகாரம் காலஞ்செல்லலாயினர். 68 வயதுடையவரானஇவர் உலகசுகாதாரஸ்தாபனத்தின்தென்கிழக்காசிய பகுதியின் சுகாதாரஉதவித்தலைவராக முன்னர்கடமையாற்றிவந்தார். இவர் பர்மா அரசாங்கத்திற்கு உலகசுகாதாரஸ்தாபனத்தின் சுகாதாரஆலோசகராகக் கடமைபார்த்துவந்து, அதேஸ்தாபனத்தின்சார்பாக ஓர்புதியபதவியை வகிக்கும்பொருட்டு ஆபுகானிஸ்தானின் தலைப்பட்டணமாகிய கபூல்நகருக்குச் செல்லும்வழியிலே புதுடில்லிநகர் போய்ச்சேர்ந்து, அங்கு தங்கியிருக்கும்போது சென்றவியாழக்கிழமை திடீரெனமார்புவலிகண்டு ஓர்ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பெற்று அங்கேமரணமாயினர்.

## புதிய பட்டினசபை

சங்கானைக் கிராமச்சங்கத்தின் தற்போதைய பதவிகாலம் வருகிற தைமாதம் முடிவடையும். அதன்மேல் சங்கானைக் கிராமத்தலைமைக்காரர்பிரிவு ஓர்புதியபட்டினசபையாக மாறும். மீதியான வட்டாரங்கள் சேர்ந்து ஓர் புதிய கிராமச்சங்கமாக அமையவிருக்கின்றன.

## மாந்தோட்டம்பண்ணை

கல்லோயாப் பள்ளத்தாக்கின் இடதுகரையிலுள்ள உயர்ந்தநிலத்திலே ஆயிரம்ஏக்கரில் பாரியமாந்தோட்டப்பண்ணைஒன்றைஅமைப்பதெனக் கல்லோயா அபிவிருத்திச்சபை முடிவு செய்துள்ளது. அப்பண்ணையிலே 20,000ஒட்டுமாங்கன்றுகளும், இவற்றுடன்20,000பலாக்கன்றுகளும் நாட்டப்படும். பண்ணையை அமைக்கும் வேலை விரைவிலே ஆரம்பமாகவிருக்கிறது.

## ஆசிரியரும் பிரம்படியும்

ஆசிரியர்கள் மாணவர்களைப் பிரம்பால்அடிக்கப்படாதென்று விதிக்கப்பட்டுள்ளதடையை நீக்கிவிடவேண்டுமென்றும், பாடசாலைகளிலே ஒழுக்கமும், கட்டுப்பாடும் குன்றிக்கொண்டுவருவதைத்தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கல்விமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணைஒன்று சென்ற 19-ந்திகதிகூடிய அழுத்தகாமப்பட்டினசங்ககூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## வெளியேறிய இந்தியர்கள்

கொழும்பிலுள்ள இந்தியதூதுவராலயம் விடுத்துள்ள ஓர் அறிக்கைப்படி, இலங்கைஅரசாங்கம் நாடுகடத்தும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்ததுமுதல் இவ்வருடம் ஆவணிமாதம் முடிகிறவரையிலே 53,209 இந்தியர்கள் இலங்கையிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். இவர்களில் 27,685 பேர் தங்கள்சொந்த விருப்பப்படியும், மீதியானவர்கள் குடியேற்றக் கட்டுப்பாட்டு அதிகாரியின் நாடுகடத்தும் அறிவித்தலின்படியும் வெளியேறினார்கள்.

## புதியபுகையிலை ஒப்பந்தம்

புதியடில்லி சென்றிருந்த இலங்கைத்தூதுக்கோஷ்டி இந்தியஅதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின்விளைவாக ஓர்புதிய புகையிலை ஒப்பந்தம் சென்ற 18-ந்திகதியன்று அங்கு கைச்சாத்திடப்படலாயிற்று. இருநாடுகளுக்குமிடையே செய்யப்பட்டுள்ள புதியஒப்பந்தத்தின்படி, அடுத்தவருடம்இலங்கை 1,500கண்டி யாழ்ப்பாணப்புகையிலையை இந்தியாவுக்கு ஏற்றுமதிசெய்யும். இந்தஅளவு அடுத்தநான்குவருடங்களிலும் படிப்படியாகக் குறைக்கப்படும். மேலும் முதலாவதுவருடத்தில் 20லட்சம்ரூத்தல் இந்தியபீடியை இலங்கையில் இறக்குமதிசெய்யவும், அடுத்தநான்கு வருடங்களிலும் இந்தஅளவைப் படிப்படியாகக் குறைத்துவிடவும் புதியஒப்பந்தம் வழிவகைசெய்துள்ளது.

## கல்லூரிப் பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா நாளைநின்றுவரும் சனிக்கிழமை மாலை 6-15 மணிக்குக் கல்லூரிமண்டபத்தில் ஆரம்பமாகி நடந்தேறும். யாழ்ப்பாண அரசாங்கதலைவர் திரு. எம். ஸ்ரீகந்தா அவர்கள் தலைமைவகிப்பார். அவர்பாரியார் பரிசில்கள் வழங்குவார்.

## திரிகோணமலைத் துறைமுகம்

திரிகோணமலைக் கடற்படைத்தளம் இலங்கை அரசாங்கத்திடம் கைமாறியதைத்தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்திலே பிரதமர் பண்டாரநாயகா பேசியபோது: இங்கிருந்த பிரித்தானிய கடற்படைத்தளம் மூடப்பட்டதோடு தங்களுக்குக் கஷ்டகாலந்தானென்று திரிகோணமலைமக்கள் நினையாதிருப்பார்களாக; கொழும்பைப்போன்று திரிகோணமலையும் விரைவிலே ஓர்வர்த்தகத்துறைமுகமாகச் சிறந்துவிளங்கும்; தற்போது இத்தளம் கைமாறியதன்விளைவாக வேலையிழக்கும் சகலருக்கும் அரசாங்கம் திட்டங்களைக்கொண்டிருக்கிறதெனக் கூறலாயினர்.

## புதியசெனற்றர்கள்

சனப்பிரதிநிதிகள்சபை சென்றதிங்கட்கிழமைபிற்பகல் கூடியபோது, முதலாவதாகப் புதியசெனற்றர்களின் தேர்தல் நடைபெறலாயிற்று. வாக்கெடுப்பு இரகசியமாக நடைபெற்றது. எம். பி. ஈ. கட்சியின்சார்பாகத் திரு. சாள்ஸ்பாட்றன், திரு. ஏ. டி. ஜயசேகரா, பண்டிதவிக்கிரமாராய்ச்சிஆகியோரும், சமசமாஜகட்சியின்சார்பாகத் திரு. டொறிக் டிசூசாவும், சமஷ்டிக் கட்சியின்சார்பாக திரு. ஜி. நல்லையாவும் தெரியப்பெற்றனர். நியமனஅங்கத்தவராகக் கவர்னர்-ஜெனறல் திரு. சி. விஜயசிங்கா, டக்றர்ஜேம்ஸ் பெட்றிஸ், திரு. பி. எச். லுனுவில, திரு. எல். ஜயசந்திரா, திரு. டி. கே. ஏ. செனரத்ன எனும்ஐவரையும் நியமனஞ்செய்யலாயினர்.

## பாடசாலைகளும் பாடப்புத்தகங்களும்

தற்போது பாவிக்கப்பட்டுவரும் பாடப்புத்தகங்களை வருங்காலத்தில் கல்விப்பகுதியின் அனுமதியின்றி மாற்றப்படாதென்று வித்தியாதிபதி அரசினர் பாடசாலை அதிபர்களுக்கும், அரசினர் உதவிபெறும் பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவித்திருக்கின்றார். பாடப்புத்தகங்களில் தேவையில்லாதமாற்றங்கள் செய்யப்படுவதாலே மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் ஏற்படுங் கஷ்டங்களைத் தடுக்குமுகமாகவே இந்தஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாடப்புத்தகங்களில் மாற்றஞ்செய்ய விரும்பினால் கல்விப்பகுதி நியமித்துள்ள பாடசாலைப் பாடப்புத்தகங்களின் கம்மிற்றிக்கு மனுச்செய்ய வேண்டுமென்றும், அந்தமனுக்களிலே பாடப்புத்தகங்களை மாற்றுதற்கான காரணங்கள் விரிவாகக்காண்பிக்கப்பட வேண்டுமென்றும், சகலமனுக்களும் கவனமாகப் பரிசீலனைசெய்யப்படுமென்றும் வித்தியாதிபதி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கண்ட அசிஸி

(சென்றவாரத் தொடர்ச்சி)

## சம்மனசுகள் இராக்கினியின் மகாதேவாலயம்

மலைமீதுள்ள நகரின்பகுதிக்குச் சுமார்ஒருமைல்தூரத்திலே சமவெளியில்உள்ள இம்மகாதேவாலயம் 1569–1679-ம் ஆண்டில் எழுப்பப்பட்டது. அதற்குள் ஏற்கெனவே 1200-ம்ஆண்டு கட்டப்பட்டிருந்த ஒருசிற்றாலயமும், வியாதிஸ்தரின்கூடமும அப்படியே உருக்குலையாது இருக்கின்றன. போர்சியுங்குலா (Porzium-cola) என்ற அச்சிற்றாலயத்தை ஆசீர்வாதப்பர்சபையார் அர்ச்சியசிட்டருக்குச்சொந்தமாகக் கொடுத்தனர். ஆனால், தரித்திர வார்த்தைப்பாட்டினிமித்தம் அவர் அதைச் சொந்தமாக ஏற்க மறுத்து, அவர்கட்கு வருடாவருடம் வாடகை செலுத்திவந்தார். இந்தச்சிற்றாலயத்தைத் தரிசிப்பவர்கட்கு எக்காலத்திலும் ஒவ்வொருமுறையும் ஒருபரிபூரண பலன் கிடைக்க 3-ம் ஹோனோரியுஸ் என்ற பாப்பானவரிடமிருந்து அவர் நிரந்தரமானசலுகை பெற்றார். மகாதேவாலயத்திற்குள் இருக்கும் இன்னொருசிறுகட்டடமாய் நோயாளிகளின் கூடத்தில்தான் (Infirmeria) அர்ச்சியசிட்டர் தமது கடைசி நாட்களைக்கழித்து 3-10-1226 மாலை பூதவுடல்நீத்துப் புகழுடல்எய்தினார். தரித்திரத்தை அவர் 'மணம்புரிந்து' கொண்டமையால் கடைசிவரை கட்டாந்தரையில் கட்டையைப்போல் படுத்திருக்கவிரும்பினார். உடனிருந்தசந்நியாசிகளின் வேண்டுகோளுக்கிணங்கி, அங்கியை மட்டுந் தரித்துக்கொண்டு தரையில்படுத்திருந்து உயிர்நீத்தார். அதைத்தான் அக்கூடத்தின் வெளிச்சுவர்மீதுள்ள ஓவியக்கூட்டம் தீட்டிக்காட்டுகின்றது.

மகாதேவாலயத்தை அடுத்துள்ள றொஸெத்தோ (Roseto) என்ற ஒரு றோசாத்தோட்டமுள்ளது. கற்புக்கு விரோதமான ஒருகடுஞ்சோதனை ஏற்பட்டபோது, அர்ச்சியசிட்டர் அத்தோட்டத்திலிருந்த முள்றோசாச் செடிகளின்மீது விழுந்து புரட்சிசெய்த தமதுசரீரத்தைத் துன்புறுத்தி அடக்கமுயன்றார். உடனே அங்கிருந்த முள்றோசாச் செடிகள்யாவும் முள்ளில்லா றோசாச்செடிகளாக மாறிவிட்டன. அதுமுதல் இதுவரை அத்தோட்டத்தில் முள்ளில்லா றோசாச் செடிகள்தான் தலைமுறை தலைமுறையாக முளைத்து வளர்ந்துவருகின்றன. அவற்றிலிருந்து ஒருசிலவற்றைச் சிலர் வேறு இடங்கட்கு எடுத்துச்சென்று நட்டுப்பார்க்கின்றனராம். ஆனால், அவைகள் அந்தவேற்றிடங்களில் உயிர்பிழைப்பதில்லையாம்.

## றிவோ தோர்த்தோ (Rivo Torto)

அர்ச். பிரான்சீஸ்குவின் சபை ஆரம்பமான இடம் இது. அச்சபையின் ஒழுங்குகள் முதலில் எழுதப்பட்ட இடம்இது. அர்ச்சியசிட்டர் தமது முதல்சிஷ்யர்களுடன் தொடக்கத்தில் இரண்டுவருடகாலம் தங்கியிருந்த வனாந்தரமான இடமும் இதுவேயாகும். ஒரு சமையலறையும், ஒரு படுக்கை அறையும் உள்ள பாழடைந்த இவ்விடத்தை 1850-ம் ஆண்டு எடுக்கப்பட்ட கோயில்ஒன்று உள்ளடக்கி நிற்கின்றது.

## சான் தமியானோ (San Damiano)

ஊருக்குப்புறம்பே வனாந்தரமான வேறொருஇடத்தில், மலையடிவாரத்தில் அர்ச். கிளாரம்மாள் அப்போது அர்ச். பிரான்சீஸ்குவின் உதவியால் ஏற்படுத்திய கன்னியர்சபையின் முதல் சகோதரிகளுடன் வாழ்ந்த தாய்மடம் இருக்கின்றது. அதற்குச் "சான் தமியானோ" என்றுபெயர். இந்தமடம் ஆரம்பமாகு முன் தடியடி கொடுக்கும் நோக்கத்துடன் கோபாவேசமாய்த் தன்னைத் துரத்திக்கொண்டுவந்த தந்தைக்குப் பயந்து அர்ச். பிரான்சீஸ்கு அவ்விடத்தில்தான் வந்துபதுங்கினார். உடனே அங்கிருந்தசுவர்ஒன்று பிளந்து அவரை மூடி மறைத்துக்கொண்டது. தனையனைக்காணாது தந்தைஏமாந்து திரும்பிப் போய்விட்டார். அவ்வாறு அர்ச்சியசிட்டர் மறைந்திருந்த இடம் இன்று சுவரில் மாடமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. அர்ச். கிளாரம்மாள் தனது துணைச்சகோதரிகளுடன் உபயோகித்த தட்டுமுட்டுகளும், மடங்கும் நாற்காலி, மேசைமுதலிய மரச்சாமான்களும் அங்கு இன்னுமே காணக்கிடக்கின்றன. அர்ச். கிளாரம்மாளுடையவும், அவளோடு இருந்த சகோதரிகளுடையவும் பெயர்கள் எழுதப்பட்ட பட்டியல் ஒன்றையும் அங்கு பார்க்கலாம். அசிஸிநகரை ஆக்கிரமிக்க 2-ம் பிறடெறிக்அரசனால் ஏவப்பட்டுத் திரண்டுவந்த முகமதியரின்படை இக்கட்டடத்தை அணுகி முற்றுகையிட்டது. அப்போது அர்ச். கிளாரம்மாள் திவ்விய நற்கருணைப் பெட்டியைத் திறந்து, கதிர்ப்பாத்திரம் தயார்செய்து அதைப் பெரிய நீண்ட சன்னல்வழியாக உள்ளிருந்துகாட்டினாள். உடனே படைவீரர்யாவரும் பின்னிடைந்து விழுந்து எழுந்து ஓடிவிட்டனர். அந்தக் கதிர்ப்பாத்திரத்தையும் அங்கு இன்று காணலாம். அங்குள்ள சிற்றாலயத்தில் பாடுபட்டசுரூபம் ஒன்றுள்ளது. அதை ஓரிடத்திலிருந்து பார்த்தால் வேதனைப்படுவதுபோலவும், மற்றோரிடத்திலிருந்து நோக்கினால் மரித்துக்கொண்டிருப்பது போலவும், இன்னோரிடத்திலிருந்து கவனித்தால் இறந்துவிட்டதுபோலவும் தோன்றுகின்றது.

## கிளாரம்மாள் மகாதேவாலயம்

மலைமீதுள்ள அசிஸிநகருக்குள் அர்ச். கிளாரம்மாளின் மகாதேவாலயம் ஒன்றுள்ளது. அதன் சுரங்கஆலயத்தில் அர்ச்சியசிட்டவளின் கல்லறையும், அதனுள் அவளது அழியா உடலும் இருக்கின்றன. மேலே மகாதேவாலயத்தில் அர்ச். பிரான்சீஸ்குவுக்காக அர்ச். கிளாரம்மாள் செய்த சட்டையும், அங்கியும், அவளுடைய சொந்தஉடையும், அவளுடைய சொந்தச்சகோதரியான அர்ச். ஆக்னேஸின் மண்டை ஓடும், அர்ச். பிரான்சீஸ்குவிடம் "இடிந்துவிழவிருக்கும் திருச்சபையைத்தாங்க எழுந்திசெல்; சபையைஆரம்பி" என்று பேசிய பாடுபட்டசுரூபமும் உள்ளன.

மேற்கூறியவைகளேயன்றி, மேற்றிராசனஆலயம், மூதற் சந்நியாசிகள் தபம்செய்த "சிறைச்சாலை" முதலிய வேறுசில புண்ணியதலங்களும், நினைவுச்சின்னங்களும் அசிஸியில்உள்ளன. எல்லாவற்றையும் ஆறஅமரக் கண்டு தியானிக்கையில் — சிறப்பாகப் புனிதமான அவ்விடங்களில் திவ்வியபூசை ஒப்புக்கொடுக்கையில் உண்டாகும் பக்தியுணர்ச்சியும், பேரின்பச்சுவையும் இங்கு எழுத்திலே விளக்கம்பெறுதல் எளிதன்று.

---

● சுவிற்சர்லாந்து ஒருசிறியநாடாகும். அந்நாட்டில் நான்குசுவிஸ்மேற்றிராணிமாரே இருந்துவருகின்றனர். ஆனால், சுவிஸ்மேற்றிராணிமாராகப் பிறநாடுகளில் பத்துப்பேர் திருத்தொண்டாற்றிவருகின்றனர். இவர்களில் பத்தாவது மேற்றிராணியாராக யோசெவ் அல்போன்சோ ரிசெறிக் சுவாமியார் அங்குபிறைபோக்நகரிலே சமீபத்தில் அபிஷேகஞ்செய்யப் பெறலாயினர். இவர் பொலிவியாநாட்டிலே றெயெஸ்நகரின் விக்கார் அப்போஸ்தலிக்கவாக நியமனம்செய்யப் பெற்றுள்ளனர்.

## அர்ச். சவேரியார் கல்லூரி ஞானவொடுக்கம்

மன்னார், அர்ச். சவேரியார் கல்லூரியின் வருடாந்த ஞானவொடுக்கம் நிகழும் 6-10-57 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 7 மணிக்கு வங்காலைக்கட்டளைக் குருவர் வண. ஏ. மைக்கேல்சாமி சுவாமியவர்களின் முதற்பிரசங்கத்துடன் ஆரம்பமாயிற்று. இதில் எட்டாம் வகுப்பையும், அதற்குமேற்பட்டவகுப்புகளையுஞ்சேர்ந்த நூற்றுக்குமேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டார்கள். இதனால் அவர்கள் நன்குபயனடையத் தகுந்தபக்தியுள்ள சூழ்நிலையை உண்டுபண்ணும்பொருட்டுச் சங். சீசர் பிறதர்அவர்கள் சகலமாணவர்களையும் விடுதிச்சாலையில் தங்கும்படி கேட்டுக்கொண்டார். அதனால் எல்லோரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 7மணிக்கு முன்னதாகவே தேவையானபொருட்களுடன் விடுதிச்சாலை வந்துசேர்ந்தார்கள்.

7 மணிக்கு ஞானவொடுக்கபோதகர் "நாம்என்னவிதமாக ஞானவொடுக்கஞ் செய்யவேண்டும்" என்பதுபற்றி ஓர்பிரசங்கஞ்செய்தார். அதன்மேல் சங். சீசர் பிறதர்அவர்களது நோக்குசியின்படி மாணவர்கள் திங்கள், செவ்வாய் இருதினங்களிலும்நடந்து மௌனத்தை அனுசரித்தார்கள், பிறதர் அவர்கள் மிகுந்தகவனமெடுத்து மாணவர்கள்வாசிக்க வேதப்பத்திரிகைகள், புத்தகங்கள் வழங்கினார். இன்னும் போசனவேளை மாணவர்கள் மௌனம் காப்பாற்றுமாறு மேல்வகுப்புமாணவர்களிடம் பத்திரிகைகள்கொடுத்து ஒவ்வொருவராக ஒவ்வொருநேரம் வாசிக்கச்செய்தார். செவ்வாய்க்கிழமை எல்லோரும் பாவசங்கீர்த்தனஞ்செய்தார்கள். இதற்கென ஐந்து குருமார் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

செவ்வாய்க்கிழமைஇரவு 9 மணிக்குத் தேவதாயாருக்குத் தங்களை ஒப்புக்கொடுப்பதற்காக எல்லோரும் சுற்றுப்பிரகாரமாகப் பக்திப்பாக்கள்பாடி மாதாவின் திருச்சுரூபத்திற்குமுன்பாக ஒன்றுகூடினார்கள். அவ்வேளை வண. ஞானவொடுக்க போதகரால் தேவதாயாரைப்பற்றிச் சிறியபிரசங்கஞ் செய்யப்பட்டது. பின்னர் சங். சீசர்பிறதர் அவர்கள் "தேவதாயாருக்கு ஒப்புக்கொடுக்கும்" செபத்தை வாசித்தார்.

புதன்கிழமை காலை எல்லோரும் திவ்வியபூசைகண்டு திவ்வியநன்மை பெற்றார்கள். அன்றுதினமே ஞானவொடுக்க முடிவுநாளாய் இருந்தபடியால் திவ்வியபூசைமுடிந்ததும் மாணவர்கள்எல்லோரும் தங்கள் காலைப்போசனத்தின்பின் வகுப்புமுறைப்படி கல்லூரியின் மத்தியில் கிறீஸ்துராசா திருச்சுரூபத்திற்குமுன்பாக ஒன்றுகூடியதும் அங்கு ஞானவொடுக்கபோதகர் செய்த சிறுபிரசங்கத்தின்பின் எல்லோரும் ஞானஸ்நானவாக்குத்தத்தங்களைப் புதுப்பித்தார்கள். அதன்மேல் ஞானவொடுக்க போதகருக்கு மாணவர்சார்பாகவும், கல்லூரிசார்பாகவும் நன்றியுரை கூறப்பட்டது.

J. M. S. Croos
(G. C. E.)

---

● பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் வலேரியான் கிறேசியாஸ்ஆண்டவர் நல்லசுகபலதோற்றமுடையாராய்ச் சென்றபுரட்டாசிமாதம் 30-ந்திகதியன்று விமானமூலம் பம்பாய்நகர் வந்துசேரலாயினார். இவர் சுவிற்சர்லாந்திலே நான்குமாதகாலம் தங்கியிருந்து நல்லசுகம்பெற்றுத்திரும்பியிருக்கின்றார்.

● மத்தியகிழக்கு நாடுகளில் ஒன்றான சீரியாவின் தலைப்பட்டணமாகிய எஷ்ஷாம்—அதாவது தமாஸ்குஸ்நகரம் தொடர்பாக மக்கள்வசித்துவந்துள்ள உலகின் மகாப்புராதனமான நகராகும். இது கடந்த நாலாயிரவருடங்களாக இருந்துவருகிறது. தற்போது இந்நகர் நான்குலட்சம்மக்களின் கைத்தொழில்-வர்த்தக நிலையமாய் மாறியிருக்கிறது.

## மரியாயின் சேனையாரின் வருடாந்த கொண்டாட்டமும் ஞானவொடுக்கமும்

அன்று 4-10-57 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணியிருக்கும். சலாப மேற்றிராசனத்து மரியாயின்சேனை ஊழியஅங்கத்தினருக்குக் குதூகலமானவேளை. சலாப இம்மக்குலாத்தாகியூறியா—தமிழ்—வுக்குச் சேர்ந்த சலாபம், போளவத்தை, கருக்குப்பனை, கட்டைக்காடுஆதியாம் இடங்களின் பிரதிநிதிகளான சேனுவீரர் ஒரே சேனைநாயகியின் வீரர் வீராங்கனைகளாகத் திரண்டு பாரியஇயந்திர வண்டியொன்றிலேறித் தம்சேனைநாயகியைப் பாடியவராய் யாத்திரைசெய்து, தலைவில்லு அன்னம்மாள் புனிதபதியை முன்னிரவில் அண்மினர். அன்னாரைப்போன்ற சலாபக் கொமீசியத்தின்கீழுள்ளபிரெசீடியங்களும் அவண் வந்து பாளயம்கொண்டன.

அடுத்தநாட்காலை பூசையின்பின் வெளிக்கொண்டாட்டத்தின் அறிகுறியாகச் சேனை ஆரம்பச்செபம், செபமாலை ஓதிநிற்க, முற்பகல் 9மணிக்கு விளையாட்டுப்போட்டியும் தொடர்ந்துதிருப்பதியின் பரிபாலனரான வண. ஆத்தர் மாட்டின் சுவாமியவர்களால் பரிசுவழங்கலும் இனிதேநிகழ்ந்தன.

5-10-57 பிற்பகல் 3மணிக்குக்குறிப்பிட்ட ஞானவொடுக்கம் அமைதியாக ஆரம்பமாயது. அவ்வமயம்தொட்டு 8-10-57 காலைப்பூசைஈறுகத் திருப்பதியில் இருவெவ்வேறு இடங்களில் சிங்களத்திலும், தமிழிலும் ஞானவொடுக்கம் நிகழலானது. சேனையாளர் தம் சுயபரிசுத்தத்தையும், கடமையையும் கொண்டுநடத்த வேண்டப்படும் ஊக்கமும், சாதனையும்தரும்வகையில் பிரசங்கங்கள் இனிதேசெய்யப்பட்டன. அவ்வப்போது அமைந்த பக்திமுயற்சிகளிலும் ஈடுபட்டசேனையார் உகந்த ஞானவொடுக்கம் நடத்தினர்என்பதில் ஐயமில்லை.

இறுதிநாட்காலை பாட்டுப்பூசைமுடிவில்நிகழ்ந்த சற்பிரசாதஆசீர்வாத வேளையில் எல்லோரும் ஏகோபித்துத் தேவதோத்திரகானம் பாடிநிற்க, அதன்முடிவில் ஆசீர்வாதமருளப்பட்டது. பின்னர் எல்லோரும் தேவதாய் பாடிய "என்ஆத்துமமானது..." என்ற கீதம்பாடிக் கோவிலின் முன்மச்சுமண்டபத்தை அடைந்தனர். அங்கு சலாபக்கொமீசிய ஞானத்தலைவர் அதிவண. பி. சி. பெர்னாண்டோபுள்ளெ சுவாமியவர்கள் தலைமையில் ஞானவொடுக்க போதகருக்கு நன்றிசமர்ப்பிக்கும் வைபவம் உல்லாசமாக நிகழ்ந்தது. முறையே தமிழ், சிங்களம்ஆகிய இருமொழிகளிலும்போதித்த குருவர்களான வண. ஜே. எம். சவரிமுத்து, வண. பீட் பெர்னாண்டோஆகிய இருவருக்கும் முறையே திரு. வென்செஸ்லாஸ், தோமஸ் என்போரால் புகழ்மாலைகள் அணிவிக்கப்பட, நன்றியின் அடையாளமாகச் சிறுஅன்பளிப்புகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

கட்டத்தினிறுதியில் சேனையாளர் கும்பத்தைத் திரும்பஇட்டுக்கொண்டு செல்ல, வந்துநாதமிட்ட வண்டிகளால் கலக்கம்கொண்ட அன்னார், அன்னம்மாள் புனிதபதியைப் பிரியமனமிலராய் மலைத்தனர். உடல் தன் இல்லத்தை நாடிஇழுக்க, உயிர்தன்னை அவ்விடம் ஈர்த்தது எனினும்என்செய்வது? வீரர்க்கழகு பொறுதல்அன்றோ? அதனைஉணர்ந்து நடக்கவேண்டியகடமை பூண்டஅன்னார் தம்ஞானப்போராட்டக் களரிகளை அடையும்நோக்குடன் திருப்பதிக்குப் பிரியாவிடைகூறியவர்களாய்த் தத்தம்வாகனங்களில்ஏறி இல்லங்களை அடைந்தனர்.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### நாடுகடத்தப்பெற்ற சீனக்கருதினல்

சீனவிலே பீக்கிங்நகர் அதிமேற்றிராணியாரும், 1949-ம்ஆண்டு முதல் நாடுகடத்தப் பட்டுள்ள வருமான கருதினல்தோமஸ் ரியென்ஆண்டவர் சீனஅதிகாரிகளால் தணிக்கைசெய்யப்பட்ட கடிதங்கள்மூலம் தமதுஞானமக்களுடன் தொடர்புகொண்டுள்ளார். சீனக்கம்யூனிஸ்தர்கள் சமயவிஷயமாய்க் கடும்பிடியாய் நடந்துகொண்டுவந்தபோதிலும் அவர்கள்நடத்திவரும் வேதகலாபனையால் கத்தோலிக்கசீனமக்களின் வேதவிசுவாசத்தை அசைக்கமுடியவில்லையென்றும், இளைஞர்கள் இன்னுமே குருமாராவதற்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறார்களென்றும் பீக்கிங்நகரிலுள்ள தமதுவிக்கார்ஜெனறலாகிய வண. போல் பிரான்சீஸ் லீசுவாமிகளிடமிருந்து செய்தி பெற்றிருக்கின்றார். 70இளைஞர்கள் குருத்துவபதவிக்குத் தயார்செய்யப்பட்டு வருகிறார்களென்றும், ஆனால், எங்கே, எப்படியென்று தம்மாற்சொல்லிக்கொள்ளமுடியாதென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

### அர்ச். பிரான்சீஸ்குவின் திருஅங்கி

பாரம்பரியம் கூறுகிறபடி, இற்றைக்குச் சுமார் 700வருடங்களுக்குமுன்னே அர்ச். பிரான்சிஸ்கு அசிஸியார் அணிந்திருந்த திருஅங்கிஒன்று சமீபத்திலே புளோறென்ஸ்நகரிலிருந்து ஞானடம்பரபவனியாகத் தென் இத்தாலிக்குக்கொண்டுபோகப்பட்டிருக்கிறது. அங்கேஅது அப்பூலியாபிரதேசத்தில் ஊரூராக ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்படும். இந்தத்திருஅங்கி அர்ச். பிரான்சிஸ்கு அசிஸியார் ஐந்துதிருக்காய அடையாள வரம்பெற்றபோது அணிந்திருந்தஅதேஅங்கியென்று சொல்லப்படுகிறது. புளோறென்ஸ்நகரைவிட்டு வெளிப்படுமுன் பல்லாயிரக்கணக்கானமக்கள் முழந்தாட்படியிட்டுச் செபஞ்செய்துநிற்க, அந்நகர்வீதிகளினூடாக அது ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்படலாயிற்று. அப்பூலியாபிரதேசத்தின் முதற்பட்டினமாகிய பொக்கியாநகர் போய்ச் சேர்ந்ததும் அதன்மேயரிடம் அதுஒப்படைக்கப்படலாயிற்று. திருஅங்கி புஷ்பங்களால் அலங்கரிக்கப்பெற்ற விசேஷகார் ஒன்றில் வைக்கப்பட்டிருக்கிறது

### போர்மோசாவின் சமுத்திரதேவதை

சுதந்திரசீனவின் தலையிடமாகிய போர்மோசாதீவிலே சூ'ரங்நகரில் இற்றைக்கு நான்குவருடங்களின்முன் பெயரளவில்தானும் கத்தோலிக்கர்ஒருவர் இருந்ததில்லை. ஆனல், இன்று அதில் 4,000கத்தோலிக்கர் இருந்துவருகின்றனர். இவ்விதம்அங்கு மனந்திரும்புதல்கள் அதிகரிக்கக்காரணம், கம்யூனிஸ்தசீனவிலிருந்து வெளியேற்றப்பட்ட கத்தோலிக்க மிஷனரிமார் அங்குசென்று ஆற்றியுள்ள திருத்தொண்டுகளேயாகும். கம்யூனிஸ்தசீனவிலே யாங்சோநகரின்அப்போஸ்தலிக்க தலைவராயிருந்துவந்த வண. ஈயூஜின் வாஹைசுவாமியாரே அப்பகுதியில்நடைபெறும் திருத்தொண்டுகளுக்குத் தலைமைவகித்துவருகின்றார். கடந்தநான்கு வருடங்களிலும் அப்பகுதியில் அடங்கியுள்ள நான்குலட்சம்மக்களில் நாலாயிரவருக்கு மேற்பட்டவர்களைக் கத்தோலிக்கமிஷனரிமார் மனந்திருப்பியிருக்கின்றனர். போர்மோசாவின் சமுத்திரதேவதையென்றஅர்த்தமுள்ள சூரங்நகருக்குச் "சமுத்திரத்தின்நட்சத்திர"மென்ற மாதாவின் நாமத்தைச் சூட்டியிருக்கின்றனர்.

### ருஷியாவில் மாதா அருளியகாட்சி

தேவதாயார் சோவியற்ருஷியாவில் காட்சியளித்திருப்பதாக, "பைசாந்தின் கத்தோலிக்கஉலகம்" என்றபத்திரிகை அறிக்கையிட்டிருக்கின்றது. இந்தக்காட்சி சென்ற1956-ம்ஆண்டு மோட்சாரோபணதிருநாளன்று உஸ்ஹொறட்நாட்டைச்சேர்ந்த செறெட்னி எனுமிடத்தில் அருளப்பட்டதாக அப்பத்திரிகைகூறுகின்றது. "அங்கு தேவதாயார் காட்சியளித்தஇடத்தில்உண்டானசிறிய நீரோடையிலிருந்து தண்ணீர் சுரந்துகொண்டிருக்கிறது" என்றும், "காட்சியைத் தனது கண்ணாரக்கண்ட சாட்சிஒருவர் அபாயகரமான ஓர் கால்ரோகத்திலிருந்து அத்தண்ணீரில் தானே சொஸ்தமடைந்ததாகக் கூறுகின்றார்"என்றும் அப்பத்திரிகைகூறுகின்றது. செறெட்னிஎன்றஇடத்துக்குச் சமீபமாகவுள்ள செர்னெக்கா ஹோரு— அதாவது, சந்நியாசிகள்குன்றுக்கு நடைபெறும் வருடாந்ததிருயாத்திரையைக் கம்யூனிஸ்தர்கள் தடைசெய்ததன்மேல்தான் இந்தக் காட்சி அருளப்படலாயிற்று. "மக்கள் ஒன்றுகூடுவதைக் கம்யூனிஸ்தர்கள் விலக்கிவிட்டிருக்கின்றார்கள்; ஆனல், கார்ப்பேதியன் மலைகளிலுள்ள இந்தப்புதியபாத்திமாவில் செபஞ்செய்வதற்கும், ஞானகீதங்கள் பாடுவதற்கும், தேவதாயாரை மகிமைப்படுத்துவதற்குமாக மக்கள்தொடர்ந்து ஒன்றுகூடிக்கொண்டேயிருக்கிறார்கள்."என்றும்அப்பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

### ரிற்ரேவின் குரூரநடவடிக்கை

"கம்யூனிஸ்த யூகோசிலேவியாவிலே அதன்சர்வாதிகாரியான மாஷல்ரிற்ரோவின்ஆட்சியானது சமயத்தின்மட்டில் எடுத்துவரும் குரோதமானநடவடிக்கையைக் கடந்தபன்னிருவருடங்களிலும் மாற்றிக்கொள்ளவில்லை; ஆயின் சோவியற்அரசினல் அடிப்படுத்தப்பட்டுக் கம்யூனிஸ்தஆட்சி நடைபெற்றுவரும் ஏனையநாடுகளைக்காட்டிலும் அதிகம்குரூரத்தனமானமுறைகளைக் கையாளுவதிலே அது தன்னைவிசேடித்துக் காட்டியிருக்கிறது"என்று "குரேட்ரியா பிறெஸ்" எனும்பத்திரிகை செய்திவெளியிட்டிருக்கிறது. ஸ்ராலினின் ஆட்சிகாலத்தில் தானும் போலாந்தில் கத்தோலிக்கஅச்சகம்ஒன்றுஇருந்திருக்க, ரிற்ரோவின்ஆட்சியின்கீழ் கத்தோலிக்கபிரசுர அலுவல்களை நடத்தப்படாதென்று தடைவிதிக்கப்பட்டு, கத்தோலிக்கஅச்சகங்கள் நீக்கப்பட்டுள்ளன. பதினெருவருடங்களாகியும் கருதினல்ஸ்ரி[illegible] னுமேசிறைச்சாலைஒன்றில் இருந்துவருகின்றார். "அங்குள்ள அரசியற்கைதிகளான பதினயிரம் பேருள்ளும் ஏறக்குறைய நூற்றுக்கு 3விகிதமானோர் கத்தோலிக்ககுருமாராவர்; அரசாங்கத்தின் ஆதரவைப்பெற்ற குருமார்சங்கம்ஒன்றே இருந்துவருகிறது; அதில் அங்கம்வகியாதவர்கள் சிறைத்தண்டனையைஎதிர்நோக்குகின்றார்கள்; நஷ்டபரிகாரமில்லாமலே திருச்சபைச்சொத்துகள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன" என்று "வொல்கஸ்போட்"எனும் மேற்குஜேர்மன்பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

### லூர்துபதி மகாதேவாலயம்

லூர்துபதியிலே20,000மக்களை அடக்கக்கூடியதாய் நிலமட்டத்தின்கீழ் கட்டியெழுப்பப்பட்டுவருவதும், அர்ச். பத்தாம்பத்திநாதர்பேரால்பிரதிட்டைசெய்யப்படவிருப்பதுமான புதியமகாதேவாலயமானது தேவமாதாவுக்குச் சம்மனசு மங்களவார்த்தை சொன்ன திருநாளும், அப்பதியிலே அர்ச். பெர்னதேத்அம்மாளுக்குத் தேவதாயார் கடைசியான பதினெந்தாவது காட்சியருளிய நூறும்ஆண்டு ஞாபகதினமுமாகிய வருகிறபங்குனிமாதம் 25-ந்திகதியன்று சம்பிரதாயமுறைப்படியே திறந்துவைக்கப்படவிருக்கிறது. 600 அடிநீளமான இந்த மகாதேவாலயம் உலகமுழுவதிலுமிருந்து கத்தோலிக்கர்உபகரித்த நிதிகொண்டு கட்டியெழுப்பப்படுகிறது. பணம்உபகரித்தவர்களில் வாலிஸ், புற்றுனஎன்ற பசிபிக்தீவுகளைச்சேர்ந்த 8,[illegible]0 கத்தோலிக்கரும் மிகவும்வறியவர்களாய் இருந்தபோதிலும் 240 பவுண் சேகரித்து அனுப்பிவைத்ததாக லூர்துபதி மேற்றிராணியாரான தியாஸ்ஆண்டவர் தெரிவித்திருக்கின்றார்.

### போலிஷ்அரசாங்கமும் திருச்சபையும்

போலாந்திலே திருச்சபையின் நிலைமை சிறுகருமங்களில் அதிக சலுகைகள்பெற்றுச் சீரடைவதாய்க் காணப்பட்டபோதிலும் அங்கு திருச்சபைக்கும், கம்யூனிஸ்தஅரசாங்கத்துக்குமிடையே பெரும்அபிப்பிராயபேதங்கள் இன்னுமேநிலவுகின்றன. உதாரணமாக, அத்தேசபட்டாளசேவைகளுக்கு விசாரணைக்குருமாரை நியமிக்கவேண்டியதில்லையென்றும், பட்டாளங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் அந்தந்தப்பகுதிகளிலே அங்கங்குள்ள பங்குவிசாரணைக்குருமாரே தற்காலிகவிசாரணைக்குருமாராய் இருந்துவருவது போதியதாகுமென்றும் அரசாங்கம் நிற்கின்றது. மேலும் கிருக்கோ, வார்ஷோநகர்களிலுள்ள சர்வகலாசாலைகளில் வேதசாஸ்திரகலாசங்கங்களைத் திரும்பவும் ஸ்தாபிக்க வேண்டுமெனப் போலிஷ்மேற்றிராணிமார் விடாதுமுயன்றுவருகின்றனர். ஆனல், அரசாங்கமோ இந்தச் சர்வகலாசாலைகளுக்கு வெளியே ஓர்புறம்பான ஸ்தாபனமாகவேத சாஸ்திரகழகம்ஒன்றை நிறுவினலேபோதுமென நிற்கின்றது.

### மனந்திரும்பிய 40,000பேர்

பிரித்தானிய கிழக்குஆபிரிக்காவிலே கிக்கியுசாதியினரான சுதேசிகள்மத்தியிலே கத்தோலிக்கமிஷனரிமார்ஆற்றிவந்தபிறர்சிநேகதொண்டுகளாலே — அதாவது பசிபட்டினியால்வாடியவர்களை உணவுகொடுத்துப்போஷித்தும், நோய்வாய்ப்பட்டவர்களைச் சிகிச்சைசெய்து பரிபாலித்தும், கல்விபயிற்றியும் செய்துவந்த பிறர்சிநேகதொண்டுகளாலே அவர்களில் அதிகமானோரின் உள்ளங்களைக் கவர்ந்துகொண்டார்கள். அதனல்அவர்களிலே 40,000பேருக்கு மேற்பட்டவர்கள் மனந்திரும்பித் தற்போது ஞானஸ்நானத்துக்கு ஆயத்தஞ்செய்துவருவதாய்அங்கு நையெறிநகர் மேற்றிராணியாரான சாள்ஸ் கவெல்லரா ஆண்டவர் சமீபத்திலே ஐக்கியஅமெரிக்க தேசத்தில் நடத்தியசுற்றுப்பிரயாணத்தில் தெரிவித்திருக்கின்றார்.

### சிங்கப்பூர்க் குருமடம்

மலாக்கா - சிங்கப்பூர் அதிமேற்றிராணியாரான மிக்காயேல் ஒல்கோமென்டிஆண்டவர் சமீபத்தில் செய்துள்ள விண்ணப்பம் ஒன்றிலே, படிப்படியாக அதிகரித்துக்கொண்டுவருகின்றகுருத்துவமாணவர்களை அடக்கக்கூடியதாய் அதிமேற்றிராசன குருமடத்தைப் பெரிதாக்குமாறு உதவிசெய்யும்படியாய்த் தமதுஞானமக்களைக் கேட்டிருக்கின்றார். அதற்கு 75,000டலர் தேவைப்படுவதாக அவர்தெரிவித்திருக்கின்றார். தமதுஅதிமேற்றிராசனத்திலுள்ள 1,10,000கத்தோலிக்கருக்கும் அவர்செய்துகொண்ட விண்ணப்பத்திலே, "இந்நாட்டின் தேவைக்கேற்ற விகிதம் இன்னுமேஇல்லையாயினும் நமது அதிமேற்றிராசனகுருமடத்தில் குருத்துவமாணவர்களின்தொகை வருடந்தோறும்படிப்படியாக அதிகரித்துக்கொண்டு வருகிறதென்பதைத் தெரிவிக்க நாம் மகிழ்ச்சியடைகின்றோம்" எனக் கூறியிருக்கின்றார்.

### மனந்திரும்பிய பிரபலகவிஞர்

முதலாவதாக அல்பிறெட் நோயெஸ், அதன்மேல் எடிற் சிற்வெல், இப்போது சீஜ்பிறீட் சசூன்என்ற மூன்றுமாபெரும் ஆங்கிலேய கவிவாணர்கள் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருமறையில் சேர்ந்திருக்கின்றனர். கீர்த்திவாய்ந்த ஆங்கிலகவிவாணரும், நூலாசிரியருமான திரு. சீஜ்பிறீட் சசூன்அவர்கள் இற்றைக்கு ஓர்மாதத்தின்முன்னர் மனந்திரும்பி லண்டன்நகரிலுள்ள டவுண்சைட் சந்நியாசஆச்சிரமத்திலே கத்தோலிக்கதிருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்படலாயினர். 71வயதுடைய இவர் "நரிவேட்டையாடிய ஓர்மனிதரின் வரலாறு" என்றநாமத்துடன் எழுதியபுத்தகத்துக்காக 1929-ம்ஆண்டு "ஹோதோண்டென்"பரிசில் சன்மானிக்கப்பெற்றிருந்தார். இவ்வருடம் இவர் தமதுசெய்யுள்களுக்காக இராணியின்மெடல் வழங்கப்பெற்றார். முதலாவது உலகயுத்தத்தில் தமதுசேவைகளைமுன்னிட்டு "இராணுவசிலுவை" சன்மானிக்கப் பெற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஐப்பசி மாதம்

**அர்ச். செபமாலைமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்**

**பொதுக்கருத்து:** வேத கலாபனைக்குட்பட்டவர்கள் கடைசிவரை விசுவாசத்தில் நிலைத்திருக்கக் கிறீஸ்துவர்கள் விடாதுஉருக்கமாய் வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** பாப்பரசரின் வேதபோதக அலுவல்களுக்குக் கத்தோலிக்கர் அனைவரும் பொறுப்போடு உதவிபுரிவது.


சத்தியவேத

# பாதுகாவலன்

**1957-ம் ஆண்டு**

**ஐப்பசி மாதம் 24-ந் திகதி**


## "ஆண்டவரே, நீர்யார்?"

யேசுக்கிறீஸ்துநாதர் பரலோகத்துக்கெழுந்தருளிய பத்தாம் நாள் தூயஆவியான திவ்விய இஸ்பிரீத்து சாந்துவானவர் சீஷர்கள்மேல் இறங்குகின்றார். அவர்கள்எல்லோரும் தூய ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அவர் கொடுத்த வரத்தின்படியே பல பாஷைகளில் பேசுகின்றனர். வீரத்துவமாகச்சுவிசேஷத்தைப் போதிக்கத்தொடங்குகின்றனர். அர்ச். இராயப்பர்பண்ணியமுதற் பிரசங்கத்தில் மூவாயிரம்பேர் மனந்திரும்புகின்றனர். கிறீஸ்துநாதர்அடியிட்டுப்போன — உலகமெங்கும்போய்ச் சகலசாதிசனங்களுக்கும் போதிக்கும்படியாய் ஆஞ்ஞாபித்துப்போன சத்திய திருச்சபையானது விரோதிகளின் இடுக்கண்கள், எதிர்ப்புகள், இரத்தப்பிரவாகங்கள், வேதசாட்சியத்துவங்கள் மத்தியிலே மின்னல்வேகத்தில்பரந்துகொண்டிருக்கின்றது.

அப்போது ஜெருசலேமிலே நசரேயனாகிய கிறீஸ்துநாதரின் சீஷர்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச்செய்து திருச்சபையைப் பாழாக்கிவந்தவனும், அவரிலே நம்பிக்கைவைக்கிறவர்களும், அவரதுதிருநாமத்தைக் கையெடுக்கிறவர்களுமான சகலரையும் பிடித்துக்கட்டிஇம்சிக்கப் பிரதானஆசாரியர்களிடம் அதிகாரம் பெற்றிருந்தவனுமாகிய ஓர்வாலிபன் தமாஸ்குஸ்பட்டணத்துக்கு ஓர்பரிமேல் விரைந்து சென்று அதனைச் சமீபிக்கின்றான். சமீபிக்கும்போது, திடீரெனவானத்திலிருந்து ஓர்ஒளி வீழ்ந்து அவனைச்சூழ்ந்து பிரகாசிக்கவே, அவன்தரையில்விழுகின்றான். அங்ஙனம்விழுந்ததும "சவுலே, சவுலே, ஏன் என்னை உபாதிக்கிறாய்" என்று ஓர்குரலொலி கேட்கின்றது. அப்பொழுதுஅவன், "ஆண்டவரே, நீர் யார்?" என்றுவினவ, "நீ துன்பப்படுத்துகிற நசரேயனானயேசுநானே" என்ற பதில் கிடைக்கிறது.

அன்று தேவகுமாரன் நடுவனைபிலாத்துவினது நீதாசனத்தின்முன்பாகநிற்கின்றார். யூதர்களும், அவர்களின் தலைவர்களும் எந்தவிதமும் அவரை ஒழிக்க வேண்டுமென்ற குரோதசிந்தையுடன் அங்கு நிற்கின்றனர். அநேக பொய்க்குற்றச்சாட்டுகளை அவர்மேல் சுமத்துகின்றனர். அவற்றில்ஒன்று, இவர் தம்மைக் "கிறீஸ்துவாகிய இராசா" என்று சொல்லுகிறார்என்பதே. அதைக்கேட்டதே பிலாத்தன் அவரைவிழித்து, "நீ இராசாவோ?" என்று வினவுகின்றான்.

"இந்தயேசுநாதர்" — அதிசயத்துக்குரிய இந்தமனிதர் யார்? இவர் மெய்யானமனிதர்தானா? அநேககுற்றச்சாட்டுகள், குரூர வேதனைகள்மத்தியிலே அவரிடம் தோன்றிய அமைதிநிறைந்த மாட்சிமையையும், பொறுமையையும், மௌனத்தையும்கண்டு வியப்படைந்தவனாய், "நீர் எங்கிருந்துவருகிறீர்?" என வினவுகின்றான். அவர் மனிதரிலும் மேலானவர், தேவகுமாரனென்று அநேகர்கொண்டிருந்த நம்பிக்கையில் உண்மையுண்டாவென்று அறியவிரும்பியே அவ்விதம்வினவுகின்றான்.

கிறீஸ்துநாதர் கல்வாரிமலையிலே சிலுவையில்அறையுண்டிருக்கும்போது, அவரின் வலதுபுறத்திலே சிலுவையில்தொங்கியகள்வன் அவரைநோக்கி: 'சுவாமி, தேவரீர் உம்முடைய இராச்சியத்தில் சேரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறான். அவர்சிலுவையிலே சீவனைவிட்டபோது, அந்தநண்பகலிலே, அந்தகாரத்தின்மத்தியிலே அச்சத்தால்நடுங்கிக்கொண்டு சிலுவையருகில் அவர் எதிரேநின்ற அஞ்ஞானியாகிய செந்தூரியன் அப்பொழுதுசம்பவித்ததைக்கண்டு, "இந்தமனிதன் மெய்யாகவே சர்வேசுரனுடையகுமாரன் தான்" என்று ஆச்சரியத்துடன் பகர்கின்றான்.

அன்பின்அரசராகிய கிறீஸ்துஇராசாதிருநாளை நாம்கொண்டாடவிருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் "ஆண்டவரே, நீர் யார்?" "நீர் இராசாவா?" "நீர் எங்கிருந்துவருகிறீர்?" என்றவினாக்களையும், அவற்றின்விடைகளையும், வலதுபுறக்கள்வனின் மனுவையும், செந்தூரியன்கூறிய சாட்சியத்தையும்தியானித்து, கிறீஸ்து இராசாவின் பிரமாணிக்கமுள்ள உத்தமபிரசைகளாயும், அவரது ஞான இராச்சியம் அகிலமுழுவதும் பரந்தோங்கச்செய்வதில் ஆர்வங்கொண்டுழைக்கும் அப்போஸ்தலர்களாயும்இருந்துவரத் திடசங்கல்பம் செய்வோமாக!

## மத்திய கிழக்கு

இன்று உலகின்கவனமுழுவதும் மத்தியகிழக்கின்பக்கமே திரும்பியிருக்கிறது. ஏனெனில், மத்தியகிழக்கில் யுத்தமேகம் திரண்டுகொண்டிருக்கின்றது. ஓர்சிறிய துப்பாக்கிப் பிரயோகந்தானும் ஓர்பெரியயுத்தத்தை மூட்டிவிடக்கூடிய அபாயம்ஏற்பட்டிருக்கின்றது. இதற்குக்காரணம், சீரிய, துருக்கி எல்லைத்தகராறேயாகும். இந்தஎல்லைத்தகராறு காரணமாக எல்லைப்புறநாடுகளிடையே துப்பாக்கிப்பிரயோகம் ஏற்படுமானால், அதைத்தொடர்ந்து பெரியஆயுதங்கள் பிரயோகிக்கப்படும். அதுகாரணமாக அந்த நாடுகளுக்கிடையே யுத்தம் மூண்டுகொள்ளும். அதனைத் தொடர்ந்து அயல்நாடுகளும் அதில் ஈடுபட[illegible] அபாயநிலைமை ஏற்படும். இத்தகைய ஓர் சூழ்நிலைதான் இன்று மத்தியகிழக்கில் இருந்துவருகிறது. சீரியா சம்பந்தமானநிலைமை மிகவும் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருப்பதன்பயனாக எந்த நேரத்திலும் யுத்தம்மூளலாமென்ற பீதி நிலவிவருகிறது. எகிப்து-சீரிய பரஸ்பரபாதுகாப்பு ஒப்பந்தத்தின்கீழ் ஆயுதந்தாங்கிய எகிப்தியபடைகள் சீரியாவில் போய் இறங்கியிருக்கின்றன. துருக்கி-சீரிய எல்லைத்தகராறின் நிலைமை நெருக்கடியானகட்டத்தை அடைந்திருப்பதே இதற்குக் காரணமாகும். சீரியாவைத்தாக்கும்எண்ணம் துருக்கிக்குக்கிடையாதென்று துருக்கியஜனாதிபதி கூறுகின்றார். துருக்கியை ருஷியா தாக்கினால் அமெரிக்கா ருஷியாவுக்குப் பதில்அடிகொடுக்குமென்று அமெரிக்க வெளிநாட்டு மந்திரி கூறியிருக்கின்றார். சீரியா மீது ஏதும் தாக்குதல்நடந்தால் அது அராபியநாடுகள் அனைத்தின்மீதும் நடத்தியதாக்குதலாய் இருக்குமென்று ஜோர்தான்மன்னர் கூறுகின்றார். துருக்கிகாரணமாகப் போர்மூண்டால் அதினால் பெரிதும்நாசமடைவது துருக்கிதானென்று ருஷியவானொலி துருக்கியை எச்சரிக்கின்றது. சீரியாவின்எல்லையில் துருக்கி ஐம்பதினாயிரம் போர்வீரர்களையும், ஐஞ்நூறு தாங்கிகளையும் நிறுத்தியிருப்பதாகச் செய்திபரந்திருக்கின்றது. சீரியாவுக்கு ருஷியா ஆயுதங்கள்கொடுத்து உதவுகின்றது. அமெரிக்கா ஆயுதங்கள் கொடுத்துத் துருக்கியைஆதரிக்கின்றது. மத்தியகிழக்குநாடுகள் என்னும்போது, அவற்றில் ஈராக், ஈரான், லெபனன், ஜோர்தான், சவூதி, அராபியா, இஸ்ரேயேல், துருக்கி, எகிப்துமுதலாம் நாடுகள் அடங்கும். மத்தியகிழக்கிலே யுத்தம்மூளாமல் தடுத்துவைக்குமாறு ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் அவசரமவசரமாகக் கூட்டங்கள்கூடி ஆலோசித்துவருகிறது. சீரியாவுக்கும், துருக்கிக்குமிடையே யுத்தம் மூண்டுகொள்ளாது இருநாடுகளினதும் எல்லைப்புறங்களிலே ஐக்கியநாடுகளின்படைகளை நிறுத்திவைக்கவேண்டுமென்று ஆலோசனைகூறப்படுகிறது. ஆனால், இந்தவேளை பாலுக்கும் காவல், பூனைக்குந்தோழன் என்றவாறாகச் சோவியற்ருஷியா நடந்து, ஒருகால் மத்தியகிழக்குநாடுகளிடையே புரட்சிக்குவழி திறந்தும், மறுபால் உடனிருந்து வாழும்கொள்கைபற்றி வாயினிக்கப்பேசியும் ஆட்டுக்கடாச் சண்டையை எதிர்பார்ப்பதுபோல் நடந்துகொள்வதே பெரும்வினோதமாகும்.

# ஆசிய நாடுகளில் ஒரு மலர்மணக் காற்று

— சுவாமி பி. பி. சேவியர் —

இந்தியமக்களின் இதயங்களைஈர்க்கும் இக்காலப் புனிதவதிகளுள் தலைசிறந்து விளங்குபவள் குழந்தையேசுவின் சிறுமலர் தெரேசா எனில் மிகையன்று.

சிறுமலரின் பெயர்பூண்டு இந்தியநாடு அனைத்திலுமே பணியாற்றித்திகழும் பள்ளிகளும், மடங்களும், கோவில்களும், கல்லூரிகளும், சமூகசேவை விடுதிகளும், மருத்துவ நிலையங்களும் எம்நாட்டு மக்களிடையே குழந்தையேசுதெரேசம்மாள்அடைந்துள்ள சிறப்பிற்கும், செல்வாக்கிற்கும் சான்றுபகர்வனவாகும். குழந்தை யேசு தெரேஸ் என்னும் பெயர் தமிழ்க் கத்தோலிக்க இல்லங்களில் மிகவும்விரும்பப்படும் கத்தோலிக்கபெயர்களுள்ஒன்று. பாடுபட்ட யேசுவின் திருவுருவத்தை ரோசாமலர்களால் பொதிந்து, அதை நெஞ்சோடு அணைத்தவண்ணம் காட்சிதரும் புனிததெரேசம்மாளின் எழிலோவியம் நமது கத்தோலிக்க இல்லங்களின் கூடங்களை அழகுசெய்வதை நாடெங்கணும் பரக்கக்காணலாம். பல்வேறுவகைகளில் இன்று சிறுமலர்ப் பக்தி நம்மவர்களிடையே சிறப்பிடம்பெற்று விளங்குகின்றது. 1925-ம் ஆண்டு அர்ச்சியசிட்ட பட்டம்பெற்ற ஓர்இளநங்கை அவ்வளவு விரைவில் நம்மவர்களின் அன்பைக் கவர்ந்துகொண்டது எங்ஙனம்? என்ற கேள்விக்குச் சிறுமலரின் சுயவாழ்க்கை வரலாற்றை ஒருமுறை படித்தவர்களே விடை காணவல்லவராவர்.

தூத்துக்குடி முன்னாள் மேற்றிராணியாரான மகாவந். ரோச் ஆண்டகையவர்கள் குழந்தையேசு தெரேசம்மாளின் சுய வரலாற்றுப் பிரதியொன்றை நமதுநாட்டுச் சுதந்திர தந்தை மகாத்மாகாந்திக்கு அனுப்பிவைத்தார். காந்திஜி அந்தநூல் முழுவதையும் நன்றாகப் படித்தார். தெரேசம்மாளின் உள்ளத்தை ஆட்கொண்ட குழந்தைக்குரிய நம்பிக்கையும், கடவுளைத் தனது அன்புத்தந்தையெனக் கருதி அவர்மட்டில் அவள்காட்டிய அசையாத அன்பும் மகாத்மாவினுள்ளத்தைக் கொள்ளைகொண்டன. குழந்தையேசு தெரேசம்மாள் தனது நூல்வாயிலாய் வழங்கிய ஒப்பற்ற கருத்துகள் காந்திஜியின் மனதை எவ்வளவாக ஆட்கொண்டன வென்பது, அவ்வாரந்தொட்டுத் தொடர்ச்சியாகச் சிலகாலம் "ஹரிஜன்" பத்திரிகையில் அவர் வரைந்த தலையங்கங்களிலிருந்து புலனாயிற்று. பிரான்சிஸ் அசீஸியார்மட்டில் காந்திஜிக்கு எப்பொழுதுமே சிறந்த நன்மதிப்பிருந்தது. சேவாகிராமிலும், சபர்மதி ஆச்சிரமத்திலும், மகாத்மா வாழ்ந்த ஒவ்வோரிடத்திலும் தமது நண்பர்களுக்கு அறிவுரை நிகழ்த்துகையில் பிரான்சிஸ் அசீஸியாரைப்பற்றி அவர் அடிக்கடி பேசுவது வழக்கமென்று காந்திஜியுடன் மிகவும் நெருங்கிப்பழகிய ஒருவர் இக்கட்டுரையை எழுதியவரிடம் ஒருமுறை கூறினார். குழந்தையேசு தெரேசம்மாள் எழுதிய சுயவாழ்க்கைவரலாற்றைப் படித்தநாட்தொட்டுப் பிரான்சிஸ் அசீஸியாருடன் தெரேசம்மாளும் காந்திஜியின் இதயபீடத்தில் உயரியஇடம்பெற்றாள். இந்து சமயத்திற்குப் புத்துயிரளிக்கப் பாடுபட்டகாந்திஜி இந்தியாவில் கிறீஸ்துவம்பரவுவதைக்கண்டு எப்பொழுதுமே மனம் புழுங்கிவந்தார். பிரான்சிஸ்அசீஸியார், சிறுமலர்தெரேசாள் போன்ற புனிதர்கள்மட்டில் அவர் கொண்டநன்மதிப்புநம்மெய்ம்மறையின்பேரில் அவர் துவேஷம் கொள்ளாமலிருக்கத் துணைசெய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

## சிங்களவர் மட்டுமல்ல, தமிழரும்

"இலங்கையில் சிங்களமக்கள் மட்டுமல்ல, தமிழ்ப்பேசும்மக்களும் வாழுகின்றார்கள்; அவர்களுக்கென மொழி ஒன்று உண்டு; அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள் என்பதை நான் லண்டனில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற மகாநாட்டுக்குச் சென்றதன்பலனாக உலகமக்கள் அறியும்படிசெய்தேன்."

திரு. அ. அமிர்தலிங்கம்,
வட்டுக்கோட்டை, எம். பி.

## வெளியேறும் முதல்அங்கத்தவன்

"அரசாங்கத்துக்கும், தமிழரசுக் கட்சிக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்வரை பொறுத்திருங்கள்; ஒப்பந்தம் தமிழ் மக்களின் பிரதேசம், மொழி இவற்றிற்குப் பாதகமாக அமையுமெனக் கண்டால் அந்தஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துவிட்டு வெளியேறும் முதல் அங்கத்தவன் நானகவே இருப்பேன்."

திரு. எஸ். இராசதுரை,
மட்டக்களப்பு, எம். பி.

## தாய்மொழி தமிழ்மொழியே!

"இலங்கை முஸ்லீம்களின் தாய்மொழி தமிழே; இஸ்லாமிய இலக்கிய நூல்களும் இன்று தமிழ்மொழியில் ஏராளமாக இருக்கின்றன; முஸ்லீம்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழியில் கல்விகற்பதால் அவர்களின் மெய்அறிவும், சிந்தனைசக்தியும் வளர்ச்சியுறும்; தமிழ்மக்களுள் பெரும்பாலோர் தமிழ்மொழியின் பெருமையை உணராமையினாலும், பிறமொழி மோகம் தமிழ்மக்களிடையே புகுந்துவிட்டமையினாலும், தமிழ்அறிஞர்களை மக்கள் போற்றாமையினாலுமே இன்று தமிழ்மொழி வளர்ச்சிகுன்றிக் கொண்டு வருகிறது."

ஜனாப் எஸ். எம். ஏ. ஹஸன்,
மத்திய இலங்கை
இஸ்லாமியசங்க காரியதரிசி.

---

சுதந்தர சீனாவின் பெயர்பெற்ற சட்டவல்லுனரும், 1947-ம் ஆண்டு வத்திக்கானில் சீனத் தூதுவராகப் பணியாற்றியவருமான டக்றர் ஜோன் வூ அவர்கள் குழந்தையேசு தெரேசம்மாளின் கீழ்நாட்டுப் பக்தர்களுள் சிறந்தவர். ஒருநாள்அவர் தமது கத்தோலிக்க நண்பர்களுள் ஒருவரான யுவான் கியா கோங் என்பவரைக் காணச் செல்லுகையில், அவ்வீட்டுக் கூடத்தில் வைக்கப்பட்டிருந்த குழந்தையேசு தெரேசம்மாளின் திருவுருவம் அவர் கண்களைக் கவர்ந்தது. யுவானிடம்கேட்டுச் சிறுமலரின் வாழ்க்கையைப்பற்றி அறிந்துகொண்டார். இன்னும் மிகுதியாக அவளுடைய வாழ்க்கையையும், சிறப்பியல்புகளையும் ஆராய்ந்தார். கத்தோலிக்க திருச்சபையின் மேலான படிப்பனைகள் ஒரு மனித உள்ளத்தை எத்துணைபண்படுத்திப் புனிதமாக்கக் கூடும்என்பதை அந்த ஆராய்ச்சி அவருக்குத் தெளிவாக்கியது. சிறுமலரின் வாழ்க்கை என்னும் தூய நீர்ப்பொய்கையில் கத்தோலிக்க திருமறைஎன்னும் தெள்ளமுதத் தண்மதி பொன்நிலவு பரப்பிப் பிரதிபலித்துநிற்பதை அவர் கண்டார். "கத்தோலிக்க திருச்சபை எத்தகையதென்பதைக் குழந்தையேசு தெரேசம்மாளின் வாழ்க்கையால் அறிந்துகொள்ளக் கூடுமாதலால் நான் கத்தோலிக்கசமயத்தைத் தழுவிக்கொள்ளத் தடையெதுவுமில்லை" என்றார் டக்றர் வூ, நீண்ட ஆராய்ச்சியின் பயனாக. உண்மையாகவே கத்தோலிக்க மெய்ம்மறையின் மாண்புகளை எடுத்துக்காட்டும் ஒரு கண்ணாடி போன்றது சிறுமலரின் வாழ்க்கை.

## ஒருபோதும் முன்வராது

"தமிழினத்தை அடிமைப்படுத்தும் எந்தச் சக்திகளுடனும், எந்த அரசாங்கத்துடனும் ஒத்துப்போகவோ, அன்றேல் விட்டுக்கொடுக்கவோ தமிழரசுக் கட்சி ஒருபோதும் முன்வராது; தமிழரசுக்கட்சியின் கடந்தகால வரலாற்றைக்கொண்டு தமிழ்மக்கள் இந்த நம்பிக்கையான முடிவுக்குவரலாம்.

திரு. எஸ். இராசதுரை,
மட்டக்களப்பு, எம். பி.

## புத்தபிக்கு உணர்ந்துகொண்டார்

"சிங்களவர்களைப்போலவே தமிழர்களுக்கும் உணர்ச்சியும், அனுதாபமும் இருக்கின்றன என்பதை நான் இப்போது நன்றாகஉணர்ந்துகொண்டேன்; ஆகவே, இருசமூகத்தவர்க்கிடையிலும் எந்தவிதமான வேற்றுமைகளும் இருப்பதற்கு எந்தவிதமான நியாயமுமில்லை."

கனம். பண்டித பஞ்சானந்த தேரோ

## உங்கள்நாட்டில் நீதி.... ...

"இலங்கை சிங்கள மக்களுக்கே உரித்தானநாடு என்றஅபிப்பிராயத்தை வெளிநாடுகளில் வேரூன்றச்செய்வதே சிங்கள அரசியல்வாதிகள் பலரின் நோக்கமாக இருக்கிறது. இந்த நிலைமைமாறவேண்டும்; தமிழ்ப்பேசும் மக்களின்பிரதிநிதிகளும தவறாது சர்வதேச மகாநாடுகளில் கலந்துகொள்ள வேண்டும். எமது உரிமைகளுக்காக இங்கே போராடினால் மாத்திரம் போதாது; ஊருக்கு உபதேசஞ்செய்யும் ஆட்சியாளருக்கு 'உங்கள்நாட்டில் நீதிவழங்குங்கள்' என்று மற்றநாட்டார்கள் எடுத்துக்கூறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும்."

திரு. அ. அமிர்தலிங்கம்,
வட்டுக்கோட்டை, எம். பி.

## அவர்கள் பெரிய முதலாளிகள்

"இப்போதுள்ள சமசமாஜிகளின் நடவடிக்கைகளைப் பார்த்துக் காள் மாக்ஸும், லியோன் டிரொட்ஸ்கியும் தங்கள் கல்லறைகளில் புரண்டுகொண்டிருப்பார்கள். தொழிலாளர்களின் தலைவர்களென்று சொல்லித்திரியும் சமசமாஜிகள் பெரிய முதலாளிகள். பெரியஸ்தாபனங்களின் பங்காளிகள். 25 வருடங்களாக தொழிலாளருக்காய்ப் போராட்டம்நடத்தும் சமசமாஜிகள் இதுகாலவரை தொழிலாளர் ஒருவரையாவது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடத் தெரிவு செய்யவில்லை."

திரு. ஹியூ. பெர்னண்டோ,
நாத்தாண்டி, எம். பி.

## நாட்டைப் பிளவுபடுத்தியுள்ளது

"சிங்களத்தைமட்டுமே இந்நாட்டின் அரசகருமமொழியாக்கப்போவதாகப் பிரதமர் தம்பட்டமடித்தார். மக்களை ஏமாற்றுவதற்காகச் சிங்களம் மட்டும் சட்டத்தையும் நிறைவேற்றினார். ஆனால், திரு. செல்வநாயகத்தோடு அவர்செய்துள்ளஒப்பந்தம் சிங்களம்மட்டும்சட்டத்தை ஓர்கேலிக்கூத்தாக ஆக்கியிருப்பதோடு நாட்டைச் சிங்கள, தமிழ் இராச்சியங்களாகவும் கூறுபடுத்தியுள்ளது."

திரு. ஈ. எல். பி. ஹுருல்லே,
ஹொறவப்பொத்தானை, எம். பி.

## பெரமுனைக்குள்ள தயாளசிந்தை

"சமஷ்டிக்கட்சி—பிரதமர்ஒப்பந்தம் ஆசியாவின் சமீப சரித்திரத்திலேயே ஓர்மாபெரும் சாதனையாகும். சிங்களம் நாட்டின் அரசாங்கபாஷையாக இருந்துவரும். நியாயமான அளவு தமிழ்பாவிக்க அனுமதிக்கப்படும். இலங்கையிலுள்ள சிறுபான்மையோரின் நலன்களைப்பாதுகாப்பதில் மகாஜன எக்சத்பெரமுனைக்குள்ள சிந்தையே இதற்குக்காரணம். நாட்டில் பல பாஷைகள் பேசப்படும்போது சிங்களத்தைமட்டும் வளர்த்துப் பாதுகாப்பது முறையல்ல. இவ்விஷயமாகவுள்ள மனத்தாங்கல்கள்எல்லாம் பிரதேச சபைகள்வந்ததும் மறைந்துவிடும்."

பிரதமர் பண்டாரநாயகா.

## அடையாளச் சீட்டுகள்

பதினெட்டுவயதுக்கு மேற்பட்டவர்கள்யாவரும் தங்களுடன் தங்கள் அடையாளச்சீட்டுகளைக் கொண்டுசெல்ல வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. தத்தம் அடையாளச்சீட்டுகளைக்காட்டி ஒருஆணோ, பெண்ணோ அரசாங்கத்துடன் தனக்குள்ள அலுவல்களை விரைவிலேமுடித்துக்கொள்ள வசதியளிப்பதே இதன்நோக்கமாகும். அடையாளச்சீட்டுமுறை தற்போதுள்ள கஷ்டங்களைநீக்கித் தபாற்கந்தோர்களில் இலகுவாகப் பணம் கட்டவோ, பெறவோவசதியளிக்குமென்றும், அதுகள்ளக் குடியேற்றப் பிரச்சினையைத் தீர்ப்பதிலே பெரிதும் உதவுமென்றும் சொல்லப்படுகிறது.

## ஆஸ்பத்திரி லொத்தர்சுவீப்

சயரோகத்தைத்தடுத்துக் கட்டுப்படுத்துவதற்கும், ஆயுள்வேத வைத்திய சாலைகளை நடத்துவதற்கும் ஆஸ்பத்திரி லொத்தர்சுவீப்பிலிருந்து கிடைக்கும் பணம் செலவிடப்படவிருக்கிறது. ஆஸ்பத்திரி லொத்தர்சுவீப்பால் இதுவரை கிடைத்துள்ள 48லட்சம்ரூபாவில் ஒரு பெரும் பகுதி சயரோகத்தடைக் கட்டுப்பாட்டுக்கென உபயோகிக்கப்படும். மீதிப்பணம் ஆயுள்வேதவைத்திய சாலைகளை நடத்துவதற்கென்று கிராமச் சங்கங்களிடம் கொடுக்கப்படும். 400 ஆயுள்வேதவைத்தியசாலைகளைத் திறக்க வேண்டுமென்று சுகாதாரமந்திரி கொண்டுவந்த ஆலோசனையின்பேரிலேயே இவ்வாறு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

## தவறணைநீக்கமும் பெண்களும்

கள், சாராயத் தவறணைகளை நீக்குவதற்கான வாக்கெடுப்பிலே பெண்களுக்கும் வாக்குரிமையளிக்க வேண்டுமென்றும், தவறணைகள்நீக்கப்பட்டுள்ள இடங்களிலே அவைகளை மறுபடியும் அமைப்பதற்காக வாக்கெடுப்புகள்நடத்தப்படாதென்றும் மதுவிலக்குக்கம்மிஷன் ஆலோசனைகூறியிருக்கிறது. ஆடவர்கள்மதுபானம்அருந்துவதால் உள்ளபடியே கஷ்டத்துக்குள்ளாகும் பெண் இனத்துக்குத் தவறணைநீக்க வாக்கெடுப்பில் வாக்குரிமை அளியாதிருப்பது முறையல்லவென்றும், அந்தந்தப்பகுதியிலுள்ள வாக்காளரில் 61 சதவிகிதத்தினர் வாக்களித்தால்தான் தவறணைகள் மூடப்படவேண்டுமென்றும் கம்மிஷன் தனது அறிக்கையில்தெரிவித்துள்ளது.

## சாதனைபாடங்களும் நுண்கலைகளும்

பாடசாலைகளிலே அடுத்த வருடநேரஅட்டவணைகளில் சாதனைபாடங்களும், நுண்கலைகளும் இடம்பெறாவிடின் கல்விப்பகுதி அந்தஅட்டவணைகளை அங்கீகரிக்கமாட்டாதென்று வித்தியாதிபதி பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களுக்குஅறிவித்திருக்கின்றார். ஆரம்பபாடசாலைகளில் கைப்பணி, சுகாதாரம், இயற்கைச்சாஸ்திரம், சமூகஇயல் ஆதியவைகளில் கவனஞ்செலுத்த வேண்டுமென்றும், கனிஷ்ட, சிரேஷ்ட பாடசாலைகளில் சாதனைபாடங்களுக்கும், நுண்கலைப்பாடங்களுக்கும் முதவிடம் அளிக்கவேண்டுமென்றும், ஆரம்ப, கனிஷ்ட பாடசாலைகளின் கல்வித்திட்டத்தில் கல்விப்பகுதியின் ஆலோசனைகளுக்கிணங்கத் திருத்தங்கள்செய்தல் அவசியமென்றும் அவர் தலைமைஆசிரியர்களைக் கேட்டிருக்கின்றார். சாதனைபாடங்களில் மாணவிகளுக்கு வீட்டுப்பணியும், மாணவர்களுக்குத் தோட்டச்செய்கையும், கைப்பணியும் — நுண்கலைகளில் ஓவியம், இசை, நடனம் ஆதியனவும்அடங்கும்.

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

தாண்டவன்வெளி விசாரணைப் பங்கு விசுவாசிகளின் விசுவாசப் பரப்புதல்சேவை:— இப்பங்குவிசுவாசிகள் தமது பங்குவிசாரணைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமிகளுடன்சேர்ந்து விசுவாசப்பரப்புதல் சேவையைத் திறம்படநடாத்தினர். குறித்தஒன்பதுநாளும் திவ்விய பலிபூசைகண்டு, திருவிருந்தருந்தி விசுவாசப்பரப்புதலுக்காக ஒப்புக்கொடுத்தனர். பூசைவேளையில் நோவனைகள் செய்து, நமதுபரிசுத்தபிதா 12-ம்பத்திநாத பாப்பரசரின் "வேதபோதக நாடுகளுக்காகச் சொல்லப்படும் செபம்" சொல்லி ஒப்புக்கொடுத்தனர். வாரம்முழுவதும் பூசைப்பரிசாரகர்கள் விசுவாசப்பரப்புதற்சின்னத்தை ஒவ்வொருஇல்லத்துக்கும் கொண்டுசென்று விற்றுவந்ததுடன், உண்டியல்களில் காணிக்கைகளும் பெற்றுவந்தனர். மாசில்லாதமாதா பத்திச்சபைக்கன்னியர்கள் பூச்செண்டுகள் விற்றுவந்தனர். இப்பங்கிலுள்ள பாடசாலைகளின் மாணவர்மாணவிகளும், ஆசிரியர்ஆசிரியைகளும் தேவையானபூச்செண்டுகள் கொடுத்துதவினர்.

20-10-56 ஞாயிறுவாரம் 5-30 மணிக்குப் பங்குவிசாரணைக்குரவர் பங்குஆலயத்தில் முதலாவது திவ்விய பலிபூசையை விசுவாசப்பரப்புதல் நாடுகளுக்காக நிறைவேற்றி ஒப்புக்கொடுத்தார். அநேகம்விசுவாசிகள் பூசைகண்டு, திருவிருந்தருந்தி அதே நோக்கத்துக்காக ஒப்புக்கொடுத்தனர். இரண்டாம்பூசை வண. எல். அல்பகூர்க்சுவாமிகளால் பாடற்பூசையாக நிறைவேறி மூந்தியநோக்கத்துக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின்னர் நாள்முழுவதும் திவ்வியசற்பிரசாத எழுந்தேற்றம் செய்யப்பட்டிருக்க, பத்திச்சபையினரும், விசுவாசிகளும், ஒருமித்தும், தனித்தும ஒழுங்காகச் சந்திப்புகள்நடாத்தி ஒப்புக்கொடுத்தனர். ஈற்றில் பி. ப. 5-30மணியளவில் சற்பிரசாதஆசீர் அருளப்பட்டது.

யாத்திரிகர்களின் ஆலயமாகத் திகழும் சதாசகாயமாதா (ஆயித்தியமலை) ஆலயத்தில் பங்குவிசாரணைக்குரவரால் இரண்டாவது திவ்வியபலிபூசை நிறைவேற்றித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம்அருளப்பட்டது. பூசையிலும், ஆசீர்வாதத்திலும் அநேகம் யாத்திரிகர்கள்பிரசன்னமாயிருந்தனர். திவ்வியபலிபூசையில் விசுவாசப்பரப்புதல் நாடுகளுக்காக விசேடசெபங்கள் சொல்லி ஒப்புக்கொடுக்கப்பட்டன.

—நிருபர்.

---

● சோவியற்அரசின் கொடுங்கோன்மைக்காற்றாது ருஷியாவிலிருந்தும், அது அடிப்படுத்தியுள்ள நாடுகளிலிருந்தும் வெளியேறியவர்களாய் 1 கோடியே 70லட்சம்மக்கள் பலநாடுகளிலும் குடியேறியிருக்கின்றார்கள். இவர்களில் சுமார் மூப்பதுலட்சம்பேர் ஐக்கிய அமெரிக்கதேசத்திற்போய்க் குடியேறியுள்ளனர்.

● கம்யூனிஸ்தஹங்கேரிய பாராளுமன்றத்தில் கத்தோலிக்ககுருமாராய் மூவர் இருந்துவருகின்றனர். இம்மூவரும் தங்கள்பதவிகளை ஒருமாதத்துள் இராசினாமாச்செய்துவிட வேண்டுமெனத் திருக்கந்தோரின் திருச்சங்கமானது சமீபத்தில் ஓர்கட்டளை பிறப்பித்திருக்கின்றது. ஹங்கேரியில் குருமார் அரசியலில் ஈடுபடக்கூடாதென்பதே இதற்குக்காரணமாகும்.

● நியூகினியர் தீவில்வசிக்கும் போறியாஎன்ற பூர்வீககுடிகளிடையே ஓர் நூதனவியாதி காணப்படுகிறதாம். இவ்வியாதியினால் பீடிக்கப்பட்டவர்கள் சிரித்துச்சிரித்துக் கடைசியில் இறந்துவிடுகிறார்களாம். அதாவது இவர்கள் சிரித்தேசிரித்துக் கடைசியில் மயக்கமடைந்து இறந்துவிடுவதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த செபமாலைப் படையணி

## செபியுங்கள்! செபியுங்கள்!
## மேலும் மேலும் செபியுங்கள்!!

ஆசீர்வதிக்கப்பட்டகன்னியின் அன்புக்குரிய விசுவாசிகளே, இது எங்கள் பரிசுத்ததாயின் இறுதியானவெளியீடு அல்லது வேண்டுகோள்என்பது நீங்கள் அறியாத தன்று. "இறுதியான வேண்டுகோள்" என்று நாம்சொல்லும் போது, ஒருதாயின் அந்தியகால வேண்டுகோளென நாம்கொள்ளல் வேண்டும். எவர்தாம் நமதுதாயின் அழைப்புக்குச் செவிகொடாதிருப்பர்? யார்தாம் நமதுதாயின் இறுதிவேண்டுகோளை மறுப்பர்? தாய்மைஉணர்வோடும், சோகக்குரலோடும் சலுகைபோல் எண்ணிக்கேட்கும் ஓர்அரிய அன்னையின் வேண்டுகோளை அவர்தம் குழந்தைகள் மறுப்பார்களா? எம்பரிசுத்த தேவதாயார் இடைவிடாது செபியுங்களென்றே வற்புறுத்துகின்றார். குழந்தைக்கு வேண்டியவற்றை அதன்தாய் அறியாளா? ஆம், செபம், தொல்லை மிகும்இந் நாட்களில் இன்றியமையாததாகும்.

கத்தோலிக்கரல்லாத கவிஞர்ஷேக்ஸ்பியரே செபத்தின் பலனை அறிந்து "செபத்தால் பலகாரியங்களைப் பெறலாம்" என்று கூறியுள்ளார். ஆனால், ஷேக்ஸ்பியர் அந்தக்கவர்ச்சிவாய்ந்த சொல்லின் வெளிப்படையான கருத்தையே அறிந்திருப்பார். அவர் அதன் இன்றியமையாமைபற்றியும், உள்ளத்திலேற்படும் எழுச்சிபற்றியும் சரியாய் உணர்ந்திருக்கமாட்டார். ஆனால், பரிசுத்த தேவதாயாரையிட்டும் இதே வகையில் நாம் சந்தேகப்படுவோமாயின் அவரைஅவமதித்த குற்றத்துக்குக் குறையாதகுற்றத்துக்கே ஆளாவோம். அவர் ஞானத்தின் இருப்பிடமன்றோ! தம்வாழ்நாள்முழுவதும், ஒவ்வொரு கணப்பொழுதும் செபித்துவந்ததாயார் அதன்பயனை அறிந்தே எம்மையும் செபிக்குமாறு மிகுந்தபரிவுடன் வேண்டுகின்றார்.

நீங்கள் அவருடைய வேண்டுகோளுக்குக்கீழ்ப்படிந்து செபிப்பீர்களென்பது உறுதி. ஆனால், பரிசுத்தமாதா செபித்ததைப்போல் உங்களால் செபிக்கமுடியுமா? செபத்தின் பிரதானபகுதிகள் எவையென உங்களுக்குத் தெரியுமா? ஒருசிலரே அவற்றைஅறிவர். தனிப்பட்ட சலுகைகளுக்காக — விசேஷமாக உலகசௌகரியங்களுக்காக மன்றாடுவது செபத்தின் ஏகநோக்கமல்ல என்பதை எத்தனைபேர்தான் அறிவர்? ஒருசிலரே அறிந்துள்ளார்கள். சலுகைகளுக்காகச்செபிப்பது செபத்தின் இறுதிக்கதியென்பதை எத்தனைபேர் இன்னும் அறியாதிருக்கின்றனர்.

செபத்தின்சாரம் கொடுப்பதில்தான் உள்ளதுஎன்பதை அறியாதவர்பலர். அத்தகையசெபமே உண்மையானபரித்தியாகமாகும். இச்சுகுணங்கள்நிறைந்த செபந்தான் திவ்வியபூசைப்பலி. இந்தச்செபத்தைச் செபிக்கவும், செபத்தின்பெறுபேறுகள் யாவற்றையும் நிறைவுசெய்யவும் ஒருவிசுவாசி தனது நாளாந்த துன்பதுயரங்களாம் சின்னச் சிலுவைகளைப்பலிபீடத்தில்சமர்ப்பித்த மாபெரும்பலியாம் திவ்வியபூசைப்பலியுடன் ஒன்றித்து ஒப்புக்கொடுக்க வேண்டும். ஆம், இம்மகோன்னத பூசைப்பலியை எமதாக்கிக்கொள்ள நாம் எமதுசிறுபாடுகளைப் பூசைப்பலியில்இணைத்து ஒப்புவிக்கவேண்டும். அப்பொழுதுதான் தேவதாயாரின் உயர்ந்தவேண்டுகோளாகிய செபித்தலை நிறைவுசெய்தவர்களாவோம். ஆம், செபஞ்செய்தலும், ஒறுத்தல் அல்லது பாடு அனுபவித்தலுமாகிய இவ்விரண்டும் பயனளவில் ஒரேவகையானவையே. எங்களுடைய கஷ்டநஷ்டங்கள் சமுத்திரத்தில் ஒருதிவலைபோன்றது. எங்களுக்காக எங்களாண்டவர் பட்ட பாடுகளுடன் இவைகளை ஒப்பிடுதல் ஒவ்வாதகருமமாகும். ஆயினும்நாங்கள் எங்களுக்காக மன்றாடிவரவேண்டுமாதிக்கூறின் எங்களுக்காக நாங்கள் சிறிது பாடுபடவோ, ஒறுத்தல்செய்யவோ தயாராயிருத்தல்வேண்டும்.

ஒவ்வொருநாளும் ஏதோஒருதுன்பத்தைப் பலிபீடத்தில் எங்கள்ஆண்டவரும, இரட்சகருமானவருடன்சேர்ந்து ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பதை நாங்கள் அறிவோம். பரிசுத்தசெபமாலையை ஓதுங்களென்று எம்பரிசுத்த தேவமாதா வேண்டும்பொழுதும் இதைத்தான் உள்ளத்தில்கொள்கின்றார். செபமாலைப்பக்தியிற் பிரமாணிக்கமாய்இருப்பதற்குப் பரித்தியாகமும், ஒறுத்தலுமே தேவையான அம்சங்களாகும். நாள்முழுவதும் உலகவிவகாரங்களிலேஉழன்றபின் செபமாலையைப் பற்றி அக்கறையின்றிச் செபிக்காமலே படுக்கைக்குச்சென்றநாட்கள்எத்தனை? இதன்மூலம் உங்கள் பாடுகளைச்சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டீர்களென்பது உங்களுக்குத்தெரியுமா? கொடிய தலைவலியால் பீடிக்கப்பட்டு வருந்துகின்றநேரத்தில் செபமாலையை மறந்துவிட்டு வீண்முறைப்பாடுகளில் நேரத்தை எவ்வளவுநாள் வீணாக்கியிருப்பீர்கள்.

செபமாலைஓதுவதில் உண்மையான அக்கறை எடுத்திருந்தால் சிறுசிறு ஒறுத்தல்களினால் பெரும்சம்பாவனையை அடைந்திருப்பீர்கள்என்பது புலனாகும். மாதாவின்செபமாலையே இத்தனைக்கும் காரணமன்றோ! ஆ! பிரியதத்தமந்திரத்தின் ஒவ்வொரு தேன்சுவைக்கும்சொற்களும் எத்துணை ஆறுதல்தரும் உண்மை பொதிந்துள்ளது. ஆ! எம்இரட்சகரின் தன்னலமற்றபாடுகள் எவ்வளவுஉயர்ந்தவை! அவை முடிவில்லாக்கருணையைத் தாமாகவே எம் உள்ளத்தில் சுரக்கச்செய்கின்றனவே!

பிரியதத்தமந்திரத்தின் தேன்சுவைக்கும் ஒவ்வொருவார்த்தையையும் நமது உதடு உச்சரிக்கும்போது நமதுமனக்கண்முன் கிறிஸ்துநாதரின்பாடுகள் படலம்படலமாய் உருவெடுக்கின்றன. அவரது அன்பின்பார்வை நம்மைநோக்குகின்றது. திருஇருதயநாதரின் சோகச்சுனையில் நாம் மனமாரப்பருகிப் பாவநிவாரண சாந்திகொள்கிறோம்.

உதவியின்றிவருந்துகின்ற யேசுநாதர் வடித்தகுருதி எம்கண்களில் உருக்கத்தைவருவிக்கின்றது. துன்புற்ற தமது கண்களைமலர்த்தி யேசுநாதர் செபமாலைஓதும் பாவவாளனைப்பார்த்தால் அவன்நெஞ்சம் மகிழ்வால் அடித்துக்கொள்வதோடு, உடல் முழுவதுமே துடிக்காதா? ஆஹா! செபத்தால்ஏற்படும் பயன்கள் — உடலிலும், ஆத்மாவிலும் எவ்விதஅளவுக்கும் அடங்காத அத்தனைபெரியன. ஆம், துன்புறும் தேவமாதாவின் வேண்டுகோளுக்கு முன் இதிலுள்ள இன்பமெல்லாம் ஆழமற்றவையே.

வியாகுலம்நிறைந்த எம்பரிசுத்த மாதாவின் அந்திய வேண்டுகோள் சொல்லப்பட்டு எத்தனையோ ஆண்டுகள் கடந்துவிட்டனஎன்பதையும், இவ்வுலகம்அதைஅசட்டைத்தனமாய்ச்செபித்துவருகிறது என்பதையும் நீங்கள்எப்பொழுதாவது உணர்ந்தீர்களா? தேவதாயாரின் அழைப்பிற்கு நாம்கூறும் பதில்என்ன? அவருடைய தாயுள்ளம் சாந்திஅடைவதற்கு நமதுநோயோ, உடற் துன்பங்களோ செபிப்பதற்குத் தடைகளாக இருக்கக்கூடாது. நான் என்மாதாவை நம்புகிறபடியால் செபமாலை ஓதி அவர்புகழைப் பாடவேண்டும். என்னால்முடிந்த அளவுக்காகுதல் நான்செபிக்கவேண்டும். நான்முழுமனதுடன் எண்ணினால் என்னால்முடியும். அவருக்காகவும், எனக்காகவும் சில ஒறுத்தல்களைச் செய்வேனென்று உறுதிகொள்வேன். ஏனெனில், தாயன்புடன் என்னை நேசித்தபடியால் நம்மைக்காப்பாற்ற இவ்வுலகுக்குவந்து திருச் செபமாலைப்பக்தியைப் பிரமாணிக்கமாய் அனுசரிக்கும்படி வற்புறுத்தியுள்ளார். எங்கள்அன்னையின் புகழைப்பாடும் அருமைச்செபமாலையை ஆர்வமாய்ச்செபிப்போமாக!

திவ்வியபூசை, பரித்தியாகம், திருச்செபமாலைப்பக்தி இவைதான் எங்கள் அன்னையின் இறுதிவாக்கின் இரத்தினச்சுருக்கம். பரிசுத்தசெபமாலைப் படையணிதான் பாத்திமாசெய்தியைப் பகிரங்கப்படுத்தும் உறுதிச்சாதனம்—மாணசாதனம். இச்சாதனத்துக்கு ஏற்றசாட்சியாகக் கையொப்பமிட்டு உறுதிப்படுத்துமாறு பிரமாணிக்கமுள்ள கத்தோலிக்கனே! நீ அழைக்கப்படுகின்றாய். உன்பரலோகஅன்னையின் இறுதிவேண்டுகோளை நீ மதிக்கிறாயா என்ன?

பதிவுப்பத்திரங்கள் வேண்டுவோர்,

செபமாலைப் படையணி,
பொஸ்கோ வித்தியாசாலை,
ஹற்றன்

என்றமுகவரிக்கு எழுதவும்.

# பொதுவர்த்தமானம்

## முசோலினியின் சொத்துகள்

இத்தாலிய சர்வாதிகாரியாயிருந்து காலஞ்சென்ற சிஞ்ஞோர் பெனிற்றோ முசோலினியின் பத்துக்கோடி லீறு (1,60,000 அமெரிக்க டலர்) பெறுமதியான சொத்துகளைப் பெறும்படியாக அவரின்சகோதரர் அானல்டோ முசோலினியின் மகளான றேசா முசோலினியும், அவள்கணவரான வன்னிபப்ரீ நியோடொறுனியும ஜப்பானிய அரசாங்கத்தின்மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். 2-வதுஉலக யுத்தத்தின்போது றோமைநகரிலே ஜப்பானிய ஸ்தானிகராயிருந்த ஷூகோ ஜூரோ ஹிடாக்காவிடம் விலைமதித்தற்கரிய பொருள்கள் அடங்கிய எட்டுப் பெட்டிகள் பாதுகாப்புக்காகக் கொடுக்கப்பட்டன. அவைகளை அவர் சுவிற்சர்லாந்திலே பேண்நகரிலுள்ள ஜப்பானிய தூதராலயத்துக்கு அனுப்பிவைத்தார். யுத்தத்துக்குப்பின் முன்சொன்ன இருவரும் அவைகளைப்பெறுவதற்காகப் பேண்நகர் சென்றனர். அங்கே எட்டுப்பெட்டிகளும் திறக்கப்பட்டபோது அவைகள் வெறுமையாயிருக்கக்கண்டதும் அவர்கள் மலைத்துப்போயினர். சிஞ்ஞோர் முசோலினியின் சொத்துகளைத் தங்களுக்குத்திருப்பித்தரவேண்டுமென்று இருவரும்றோமை நகரிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகராலயத்துக்கும், ஜப்பானிய அரசாங்கத்துக்கும் பலமுறை மனுச்செய்தும் பதில் இன்னும் கிடைக்கவில்லை.

## திருக்கல்லறைக் கோவில்

திருக்கல்லறைக்கோவிலைப் புதுப்பித்துக் கட்டுதற்கானதிட்டங்களைச் செய்வதற்கென்று ஜெருசலமிலே சமீபத்தில் முதன்மைவாய்ந்த சிற்பிகள் பலர் ஒன்றுகூடலாயினர். கடந்தபல நூற்றாண்டுகளிலும் இந்தக்கோவில் பார்சியர்களாலும், றோமர்களாலும், முஸ்லீம்களாலும், பூகம்பங்களாலும், அக்கினியாலும் பலமுறை அழிக்கப்பட்டும் தேவாதீனமாகத் திரும்பவும் கட்டியெழுப்பப்பட்டு வரலாயிற்று. ஜோர்தான்நாட்டு ஜெருசலேமின் பழையமதில்நகரில் அமைந்துள்ள இக்கோவிலின் தென்புறச் சிறகுமண்டபத்தையும், பிரவேசவாயில்களில்ஒன்றையும் அடித்துக்கொண்டு விழாது தாங்கிப் பாதுகாத்துக்கொண்டு உருக்கினால் அமைத்த பிரமாண்டமான அணைச் சுவர்கள் இருப்பதாலே பல்லாயிரக் கணக்கான யாத்திரிகர்களுக்கு அதன் வெளிக்காட்சி ஏறக்குறைய முழுவதும் மறைவாகவே இருக்கின்றது. உட்புறத்திலே செப்பமில்லாத மரக்கட்டுக்கோப்பானது திருசேத்திரத்தின் பெரும்பாகங்களை விருபமாக்குகின்றது. இவற்றில் நமதுதிவ்வியகர்த்தர் சிலுவையில் மரணமடைந்தஇடமும் அடங்குவதாகும். மேலதிகமான சேத்திரங்களும், மரங்கொண்டுஅமைத்த சாளரமேன்மாடிகளும்கத்தோலிக்க, கிரேக்க பிரிவினை, ஆர்மீனியசமூகங்களாலே அமைக்கப்பட்டுள்ளன. இந்தமூன்று சமூகங்களிலே ஒவ்வொன்றும் கோவிலின்பல்வேறுபகுதிகளில் தனக்கென்று சொந்தமானஉரிமைகளைக் கொண்டிருக்கின்றன.

## புதிய வெண்கலக் கதவுகள்

றோமாபுரி, சம்பேதுருவானவர் மகா தேவாலயத்துக்கும், பிரவேசமண்டபத்துக்குமிடையே இருந்துவருகின்ற ஐந்துமரக்கதவுகளிலும் மூன்றினிடமாக மூன்று வெண்கலக்கதவுகள் அமைக்கப்படவிருக்கின்றன. இவற்றில் முதலாவதுகதவு அடுத்தவருடம் பரிசுத்தபாப்பரசரின் 82-வது பிறந்த பெருநாளன்று அமைக்கப்படவிருக்கிறது. இது 25அடிக்குமேல் உயரமும், 12அடிக்குமேல் அகலமுமுடையது. இதிலே மன்சுஎன்ற பிரபலசிற்பியின் கைவேலையாய்த் திவ்விய கர்த்தரின் ஆரோகணத்தையும், தேவதாயாரின் ஆரோபணத்தையும் வர்ணித்துக்காட்டும் சித்திரவேலைப்பாடுகள் அமைந்திருக்கும். அர்ச். பேதுருவானவர்மகா தேவாலயத்தின் கனகவிருந்த பவேரியாவின் ஜோர்ஜ்இளவரசர் 1943-ம் ஆண்டு மாணமடைந்தபோது, அவற்றிற்கென்று தமது மாணசாதனத்தில் போதியபணம் விட்டுப்போயிருந்தார். ஆனால், கடந்த பன்னிருமாதங்களிலும் பொருட்களின்விலை ஏற்றமடைந்தமையால் அப்பணங்கொண்டு அவற்றைச் செய்ய இயலாமற்போய்விட்டது. தற்போது மேலதிகமாகத் தேவைப்படும் பணத்தை வத்திக்கான் கனன்கள்சங்கம் உதவியிருக்கின்றது.

* * *

● போர்த்துக்காலிலே குருத்துவ அழைத்தல்கள் அத்துணை தீவிரமாக அதிகரித்துக்கொண்டு வருவதால் சன்ராறெம்முதலாம் குருமடங்கள் விசாலமாக்கப்பட்டு வருகின்றன. கொயிம்பறாவிலே கடந்த 50வருடங்களிலும் இல்லாதவிதமாய்ச் சென்றமாதம் 15 குருமார் ஒருங்கேகுருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கிறார்கள்.

● ஆசிய 'புளூ' என்று அறியப்படுகின்ற கொள்ளைநோயாகிய சளிச்சுரம் வத்திக்கான் இராச்சியத்திலே தலைகாட்டாமல் தடுத்துவைப்பதற்கான பாதுகாப்புமுறைகள் பாப்பரசரின்வைத்தியராய் மாத்திரமல்ல, வத்திக்கான் இராச்சியத்தின் சுகாதாரப்பகுதித் தலைவராயும் இருந்துவருகின்ற டக்டர் கலியாஸி -லிஸி அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

● சமூகநீதியின் பெரியபாப்பானவரெனக் கொண்டாடப்படுகிறவரான பதின்மூன்றாம் சிங்காராயபாப்பானவரின் காரியதரிசியாயிருந்த வண. வின்சென்சோ டிரெஸி சுவாமியாருக்கு முத்திப்பேறு பெற்றபட்டம் அருளுவதற்கான விசாரணையின் முதற்கட்டம் பூர்த்தியடைந்திருக்கிறது. இவர் அப்பாப்பானவருக்கு லத்தீன்பாஷை சம்பந்தமான கடிதங்களிலே காரியதரிசியாயிருந்து கடமையாற்றிவந்தார்.

● 1917-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 13-ந் திகதி பாத்திமாபதியில் மாதா கடைசிக்காட்சிஅருளிய நாற்பதாம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுவதற்குஆயத்தமாக அப்பதியிலே 150 "செபமாலைத் திவ்வியபூசைகள் தொடர்பாக நிறைவேறலாயின. அவற்றிலே கடைசியானபூசை திருச்சடங்காசாரத் திருச்சங்கதலைவரான கருதினால் சிகொக்னனி ஆண்டவரால் நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



## அருமைச் சகோதரங்களே !

அவர் அரசாளவேண்டும்! அவர்தான் கிறீஸ்துஇராசா. அவர் எப்போதும் அரசாளவேண்டும். எங்கும் அரசாளவேண்டும். அவரின் இராசாதிராசத்துவத்தை இதோ நினைப்பூட்டுகிறது மாதாவாகிய திருச்சபை. அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை கிறீஸ்துஇராசாவின் அரும்பெரும் திருநாள். மேதினியெங்குமுள்ள மெய்க்கத்தோலிக்கர் மேனியெல்லாம் மெய்மறந்த உணர்ச்சிப் பெருக்குத்தரும் பெருநாள். மாதாவாகிய திருச்சபை குதூகல ஆரவாரத்துடன், ஆர்ப்பரிப்புடன் எமது இராசாவின் திருநாளைக் கொண்டாட தூக்கிஊக்கி விடுகிறது எங்களை. அன்றையபூசையின் சபைச்செபத்தில் "சாதிசனக்குலங்களெல்லாம் அவருடைய மகாமதுரம் பொருந்திய அரசாட்சிக்குக் கீழ்ப்படிந்திருக்கக் கிருபாகடாட்சம்பண்ணியருளும்" என்று திருச்சபை பிரார்த்திக்கின்றது. இப்பூசைச் சுவிசேஷத்தில் கிறீஸ்துநாதர் தெட்டத்தெளிவாய்ப் போன்சியு பிலாத்துவுக்குத் தாம் இராசாவென்றும் தம்முடைய இராச்சியம் இவ்வுலகத்திற்கடுத்ததல்லவென்றும் கூறுகின்றார்.

கிறீஸ்துநாதரின் இராச்சியமும் ஆட்சியும் இப்பிரபஞ்சத்தின் மன்னருடையவைகளைப்போலல்ல. அவரின்ஆட்சி அன்பின்ஆட்சி. அவரே அன்பு. அவர்செங்கோல் அன்பு. அவர்முடியும் அன்பு. அவர் சிம்மாசனம் அன்பின் இருப்பிடமாகிய இருதயங்கள். அவர் ஆட்சிக்கொடியும் அன்பு. எல்லாம்அன்பு. இச்சிந்தனை நமது சிந்தைக்குத் தேனைக்ச் சுவைதருகிறது.

அருமைப் புனிதவீரர்களே! வீராதிவீரனாகிய நெப்போலியன் தனது மரணத்தறுவாயில் கூறியதைநினைவு கூருங்கள். "நான்சக்கரவர்த்தியாய்ப் பலதேசங்களை ஆண்டேன். பெரும் படைசேர்த்து நாடுகளோடு மோதினேன். ஆனால், எனது ஆட்சிமுடிந்தது. கிறீஸ்துநாதரோ அவ்விதம் படைகள் சேர்க்கவில்லை. வீறுகொண்டு மோதவில்லை. ஆனால், இன்றும் அரசாளுகிறார். கோடாகோடி இருதயங்களில், என்றும் நிலைத்திருக்கும் அவர் ஆட்சி."

யேசுவின் இராச்சியம் என்றும் எமது இருதயத்தில் இருக்கவேண்டும். அவர் எம்மில் ஆட்சிசெய்யவேண்டும். எமது இருதயம் அவர்இராச்சியம். நமது நினைவு, வாக்கு, செயல், உணர்ச்சி, புத்தி, மனம், சித்தம் இவையாவும் அவரின் ஆட்சிக்குள்ளாகவேண்டும்.

சென்றஞாயிறு மிஷன்ஞாயிறு. விசுவாசம் பரம்பவேண்டுமென்று வானம்பிளக்க மன்றாடினோம். இத்



தினத்தில் இன்னும் ஊன்றிப் பிரலாபித்தல்வேண்டும். அவருடைய இராச்சியம் தீவிரமாய் உலகத்தில் பரவமன்றாடவேண்டும். நஞ்சுகலந்த பஞ்சாமிர்த.கொள்கைகள் உலகில் தாண்டவமாடுகின்றன. அவைகளை அறவேஅகற்றிக் கிறீஸ்துஇராசாவின் மதுரச்செங்கோல் ஊன்றப்படவேண்டும், அவரின்சிலுவை எங்கும் நாட்டப்படவேண்டும், அவர்கொடி பட்டொளிவீசி இருதயங்களில்பறக்கவேண்டும். இலங்கை அவர்ஆட்சிக்குள் சீக்கிரம் வந்துசேரவேண்டும். இல்லையேல் நமது நாடுசீரழிந்து, உருக்குலைந்துபோய்விடும். புனிதவீரர்களே! ஆண்டவரின் இராச்சியத்தைத் [illegible]ளிர்ச்சியுறச்செய்ய எழுங்கள்! நீங்கள் மாபெரும்படையாகத் திரண்டுவாருங்கள். கிறீஸ்துநாதருக்காகப் போராடுங்கள்.

கிறீஸ்து இராசாவுக்கு ஜே!

அண்ணை.

---

## அண்டினோரை ஆதரிக்கும் அமலோற்பவம்.

மாலை வேளை. சுமார் ஆறு மணி இருக்கும். கதிரவனும் நாள் முழுவதும் உலகத்தைக் காத்து, களைப்புடன் தன் இருப்பிடம் சென்றான்.

சென்னையில் ஒருதெருக்கோடியில் ஓர் பெரியவீடு இருக்கின்றது. அவ்வீட்டின் மேல்மாடியில் ஒரு விசாலமான அறையில், ஓர் வட்ட மேசையைச்சுற்றி மூன்று நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அதில்மூன்று வாலிபர்கள் இருந்து, மதுபானம் அருந்திக்கொண்டும், சீட்டாடிக் கொண்டுமிருந்தனர். அம்மூவரில்நடுவில் உட்கார்ந்திருப்பவன் பாஸ்கரன். அவன் பக்கத்தில் இருப்பவர்கள் துஷ்ட நண்பர்கள்.

முன்பு "மதுவிலக்கு"ச் சங்கத்தில் தலைவனாயிருந்த பாஸ்கரன் கெட்ட சகாக்களால் இப்போது மதுக் கோப்பையுடனிருக்கிறான். பாஸ்கரனுடைய தகப்பனும், தாயும் முன்பே இறந்துவிட்டனர். தகப்பனார் வைத்துப்போன ஏராளமான சொத்தையும் மதுபானம் அருந்தி விரயம் செய்தான்.

"நீரிற்குமிழி வாழ்க்கை"என்பதை அவன்ஓர்சிறிதும் உணர்ந்தானில்லை. ஆனால், பாஸ்கரனின் அடாதசெயல்களைப் பார்த்து மனம் உருகினாள் அவனுடைய தங்கை சரசா.

இருவருமே அவ்வீட்டில் வாழ்ந்தனர். அவனுடைய துஷ்டசகவாசத்தையொழிக்கச் சரசா செய்யாத சூழ்ச்சி இல்லை.

"கழுதைக்கு உபதேசம் காதிலே சொன்னாலும் அவயக் குரலொழிய அங்கொன்றுமில்லை" என்றாற்போல யாவும் பயனற்றதாய் விட்டது. அருணனும் பன்னெடுநாள் உலகிற்குத் தோன்றி மறைந்தான். ஆனால், பாஸ்கரனின்மனதில் தோன்றிய கெட்ட ஆசாபாசம் இன்னும் மறைந்தபாடில்லை.

ஒருநாள் சரசா ஒரு கத்தோலிக்க பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதில் "அண்டினோரை ஆதரிக்கும் அமலோற்பவம்" என்ற தலைப்பின் கீழ் ஓர் கட்டுரை வரையப்பட்டிருந்தது.

அதை ஆவலுடன் வாசித்து முடித்து எதையோ கண்டு பிடித்தவள்போல், மலர்ந்த முகத்துடன் எழுந்துசென்றாள். அன்றிலிருந்தே அவள் அமலோற்பவ மாதாவுக்கு ஓர் நவநாள் துவக்கினாள்.

"எங்களை ஈடேற்ற நரவுருக் கொண்ட எம்பெருமானை ஈன்ற எங்கள் தாயே! என் அண்ணன் மனந் திரும்பக் கிருபை செய்யும்" என்று தினந்தோறும் செபிப்பாள்.

காலச்சக்கரம் வேகமாய்ச் சுழன்றது. அப்படிச் சுழன்றுகொண்டிருந்த காலமாகிய சக்கரத்தில் வருஷமாகிய மூன்றுஅம்புகள் பாய்ந்தன.

பாஸ்கரன் இப்போது வியாதியாய்ப்படுக்கையில்படுத்திருக்கிறான். அவனைக் காசநோய் துரும்பாக்கியது. இப்போதுதான் பாஸ்கரனுக்குப் புத்தி வந்தது.

அவனுடைய அடாதசெய்கைகள் எல்லாம் அவன்கண்முன் ஒவ்வொன்றாக வந்தன. தன்தங்கையை எத்தனையோ தடவை அடித்ததைப்பற்றி யோசிக்க யோசிக்க, அவன் மனம் எண்ணாததெல்லாம் எண்ணிற்று.

அவனைஅறியாமலே அவன்கண்களினின்று நீர் தாரைதாரையாக வந்தது. அப்போது அவனுக்குத்தேநீர் கொண்டுவந்த சரசா அவனுடைய முகத்தைப்பார்த்துத் திடுக்கிட்டாள்.

ஆனால், தங்கையைக்கண்ட பாஸ்கரன் அழுது புலம்பினான். "என்னருமைத்தங்கையே! என்னை மன்னிப்பாயா? என்குற்றத்தை இப்போது உணருகிறேன். ஆனால், நீ தேவதாயிடம் என் நன்னடத்தைக்காக வேண்டிக்கொண்ட செபம் கேட்கப் பட்டிருக்கிறது. நான் இப்போது மனந்திரும்பிவிட்டேன். உன்வேண்டுதலின்பயனாக நான் சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தேன். உன்னை எத்தனையோ தடவை அடித்தேன். ஆனால், நீ பொறுமையுடனிருந்தாய். உன்வாயைத் திறந்து "உன்னை மன்னித்துவிட்டேன்" என்று சொல்லு" எனக் கெஞ்சிக்கேட்டான்.

தன்வேண்டுதல் கேட்கப்பட்டதென்பதை அறிந்த அந்தஆரணங்கு சொல்லொண்ணா ஆனந்தத்தை அனுபவித்தாள். தன் அண்ணனை மனப்பூர்வமாக மன்னித்தாள்.

அப்போதுஅவள் "அண்டினோரை ஆதரிக்கும் அமலோற்பவமே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்று சொன்னாள்.

(யாவும் கற்பனையே)

— M. S. J. R.

---

## உங்களுக்குத் தெரியுமா?

● பளிச்சென்று ஒருகண்ணைவெட்டும் வெளிச்சம். அதைத்தொடர்ந்து காதுகள் செவிடுபொடியாகும்படி—உலகமே 'கிடுகிடு'என்று ஆடும்படி—ஒருஓசை. அதுதான் இடி! இடியைப்பற்றி மக்களிடையே பல்வகைக் கருத்துகள் இருக்கின்றன. அவற்றில்ஒன்று இடி ஒரேஇடத்தில் ஒருதடவைக்குமேல் விழுவதில்லைஎன்பது. இதுதவறு. நியூயோர்க்கிலுள்ள அரசாங்க கட்டிடமான 'எம்பயர் [illegible]ரேற் பில்டிங்' (Empire State Building) கின்மீது ஒருவருடத்திலேயே இ[illegible]பதுமுப்பது தடவைக்குமேல் இடிவிழுகின்றது. ஆனால், அக்கட்டிடம் யாதொருசேதமுமின்றிக் கம்பீரமாக நிமிர்ந்து நிற்பதற்குக்காரணம் அக்கட்டிடத்தில் அமைந்துள்ள 'மின்வாங்கி'களாம்.

● அமெரிக்காவில் வருடந்தோறும் 2,000 பேர்கள் மின்னலால் தாக்கப்படுகின்றார்கள். 500 பேர்வரை கொல்லப்படுகிறார்கள்.

● உலகிலேயே மிகவும் ஆழமான பள்ளத்தாக்குகள் இத்தாலிதேசத்தில் இருக்கின்றன. அங்கு 1927-இல் ஒருஆராய்ச்சிக்கோஷ்டியினர் பூமிக்கடியில் 2,071' வரை பிரயாணஞ்செய்துள்ளார்கள். இதுவே மனிதன் பூமிக்கடியில்சென்று ஆராய்ச்சிநடத்திய மிகவும் நீண்டதூரம்என்று கருதப்படுகிறது.

● கடலலைகள் வெவ்வேறுஇடங்களில் வெவ்வேறுஉயரத்துக்குஎழும்புகின்றன — கடலலைகள் எழும்புவதற்கு முக்கியகாரணம், சந்திரனின் ஆகர்ஷணவிசையாகும். மேலும் சூரியனின் இச்சக்தியும் ஓரளவில்பங்குகொள்கிறது. இவற்றைத்தவிர காற்று, வானிலை, கடல்நீர்ஓட்டம், துறைமுகம் அல்லது உள்முகம் இவற்றின்அளவு இவற்றைப்பொறுத்தும் கடலலைகள் எழும்புகின்றன.

● கடல்நீர்தான் உவர்ப்பாக இருக்கிறதுஎன்று எண்ணாதீர்கள். ஆர்ஜென்ரீனாவிலுள்ள 'றியோ சாலடோ' (Rio Salado) என்ற ஆற்றின்நீர் உவர்ப்பானது. இதேபோன்று மத்தியஅமெரிக்காவிலுள்ள 'றியோடோவின்கர்' (Riodo Vinger) என்ற ஆற்றின்நீர் காடி (அரிசிகழுவியநீர்) போலப் புளிப்பாக இருக்குமாம்!

---

## வனத்து அந்தோனியாரும் வேதாளமும்

திவ்வியயேசுவை, பிசாசு சோதித்தது சுவிசேஷசரிதை. யேசுவின் தாசர்களையும் பிசாசுகள் சும்மாவிடவில்லை. அவர்களையும் பலதடவைகளில், பலவிதங்களிலும் சோதித்துள்ளன. ஆதிகாலத்தில் வனத்து அந்தோனியார் பிசாசினிடமிருந்து பட்டபாடும், அதனோடு போட்ட போராட்டமும் கொஞ்ச நஞ்சமல்ல. எழுத்தாளர்கள் "அந்தோனியார் சோதனைகள்" என்று தொகுத்துக் கூறியிருக்கின்றனர். ஓவியர்கள் அந்தோனியாரைப் பிசாசு சோதித்த முறையை வரைந்துள்ளார்கள்.

பிசாசு தன்னைச் சோதனையில் அடித்து இம்சிக்கவருவதைக் கண்டால் முதன்முதல் சிலுவையடையாளம் வரைவார் அந்தோனியார். அதன்பின் பிசாசைநோக்கித் துணிவுடன் உரைப்பார்: "பிசாசே, நீ கேள்; நான் கிறீஸ்துவின் ஊழியன்; என்னோடு போராட நீ துணிந்துவந்தால், நான் பின்வாங்கமாட்டேன். இதோ இருக்கின்றேன்; நீ செய்வதைச்செய், நான்பயப்படுவதில்லை. நீ அடிமேலடியடி. நான் இளைக்கமாட்டேன். இன்னுமதிகமாக என்னை.

(அடுத்தபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபத்திரவப்படுத்து, இன்னுமதிகமாகவே கிறீஸ்துவை நேசிப்பேன். அவரைவிட்டு அகலமாட்டேன்" என்று சபதம்போட்டார். சும்மா ஆடும் பிசாசு கொட்டுச்சத்தங்கேட்டால் வாளாவிருக்குமா?

ஒருநாள் பிசாசானது அந்தோனியாருக்கு அவர் தாங்கக்கூடாதவிதத்தில் துன்பங்கள் இழைத்துவிட்டது. அந்தோனியார் இடங்கொடுக்கவில்லை. ஆயினும் அந்தோனியார் கிறீஸ்துவை நோக்கி: "ஆண்டவரே! எங்கே சென்றிருந்தீர். நான்பெருங்கஷ்டப்பட்டேனே, அந்தச்சமயம் எனக்கு உதவிபுரிய வந்திருக்கலாகாதா?" என்று விநயமாய்க் கேட்டார். கிறீஸ்துநாதர் கொடுத்தபதில்: "அந்தோனியாரே! நான் உமதுபக்கத்திற்றானிருந்தேன். எப்படிப் போராடுகிறீரென்று கவனித்தேன். நீர் கடைசிமட்டும் சண்டைபோட்டீர். விட்டுக்கொடுக்கவில்லை. வெற்றி கொண்டீர். எனக்கு அதுவோர் பெருமிதம், உமதுநாமம் எங்கும்பிரபல்யமடையும்"என்பதே.

— வே. கு.

## தீயவர் தீயவரே!

— R. R. N. G. —

**ஒருகாலத்தில் :**

காட்டில் விறகு வெட்டுங்கந்தன்
கரடிக் குட்டி கண்டெடுத்தான்
வீட்டி லிருக்கும் வேளையிலும்
விறகு வெட்டச் சென்றிடினும்
நாட்ட மெல்லாம் தன்கரடி
நன்மை யொன்றே அவனுக்கு
மாட்டின் கன்று போலந்த
மாமலைக் கரடி வளர்ந்ததுகாண்

**ஒருநாள் :**

கறி செங்குருதி கண்டறியா
காட்டுக் கரடி கந்தனவன்
அறிவே நிறைநல் நாயகனை
அடித்துக் கடித்துப் பிடித்திழுத்து
வெறியோ டதனின் உடல்கிழித்து
வேண்டும் (இ)ரத்தம் குடித்துச் சுவை
தெரிந்தவேளை கந்தன் வந்தான்
திகைத்தான் கரடி பாய்ந்தது போல்

**ஆகையால் :**

சினத்தால் கந்தன் கோடரியால்
சிறிய கரடியின் சிரம்பிளந்தான்
எனவே வீழ்ந்தது கரடிசெத்து
"என்றும் தீயவர் தீயவரே
கனவிலும் நினையேன் கசடர்களைக்
கற்றேன் இந்தப் புதுப்பாடம்
மனமே தீய நண்பர்களால்
மரண துன்பம் வரு"மென்றான்.

"ஞானரோசாச்செடிகள் இயற்கைரோசாச்செடிகளைப் போன்றன அன்று. இயற்கை ரோசாச்செடிகளிலே முட்கள்தங்கிவிடுகின்றன. ஆனால், ரோசாமலர்கள் போய்விடுகின்றன. ஞானரோசாச்செடிகளில் முட்கள் போய்விட, ரோசாமலர்கள் தங்கி விடுகின்றன."

அர்ச். பிரான்சிஸ் சலேசியார்

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 26-ந்திகதி சனிவாரம் பி. ப. 4-15மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். பகுதித்தலைவர்சங்கம் சரியாய் பி. ப. 3-30மணிக்கு அர்ச். சூசையப்பர் வாசிகசாலையில் நடைபெறும். தயவுசெய்து பகுதித்தலைவர்கள் நேரகாலத்தோடு சமுகங்கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

A. S. FRANCIS OF MARY,
(தலைவர்)
சபைக்கர்த்தருக்காக

கொழும்புத்துறை

## பழையமாணவர் சங்கம்

"கொழும்புத்துறைப் பழையமாணவர்சங்கம் தீவிரமாக முன்னேற்றமடைந்துகொண்டு வருகிறதென்பதை இன்று கூடிய விசேடபொதுக்கூட்டமே தெளிவாகஎடுத்துக்காட்டுகின்றது. எமது பொருளாதாரவளம் பெருகினாலன்றிப் பிறரின் பொருளாதாரவளத்திற்காக நாம் ஒருபோதும் உழைக்க முடியாது. எம்மோடு உலகம் நின்றுவிடவில்லை, எமது எதிர்காலசந்ததியையும் நாம் நோக்கவேண்டும், அவர்கள் சுபீட்சம்அடைய வழிதிறக்கவேண்டும். அவர்களது வாழ்வின்மலர்ச்சி எமது தியாகசேவையிலேயே தங்கியுள்ளது. எண்ணித்துணிந்து விட்டோம், இனி அயராது உழைக்கவேண்டியதுதான். பழையமாணவர்களாகிய உங்கள் சேவையை நாம் பாராட்டாதிருக்க முடியாது. உங்கள்பொருளாதாரவளத்தைப்பெருக்கும் விஷயமாயும், உங்கள் ஞானக்கடமைகளைப்பற்றிய விஷயமாயும் நவமாகஆக்கப்பட்டுள்ள ஒழுங்குகளைக்கண்டு நாம் அகமகிழ்ச்சியடைந்தது ஆச்சரியமன்று. இன்றையவிழிப்புணர்ச்சி என்றும்மலர்ச்சியுற்றுக் கொழும்புத்துறைப் பழையமாணவர்கள் ஒவ்வொருவரும் நன்மையடையவேண்டுமென வாழ்த்துகின்றோம்"என்று கொழும்புத்துறைத் தாபனத்தில் நடைபெற்ற சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய வண. வ. தியோகுப்பிள்ளை சுவாமியவர்கள் தமதுதலைமைப்பேருரையில் குறிப்பிட்டார்.

அதன்மேல் பழையமாணவர்கள் தாங்கள் கல்விபயின்ற தாபனத்தை நினைவுகூருதல், தாபன பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்தைஅண்டி அவரதுதிருநாளைப் பக்திச்சிறப்புடன் கொண்டாடுதல், அங்கத்தவர்களின் மதிப்பிற்குரிய சேவைகளைப் பாராட்டுதல், அவர்கள் அடைந்துகொள்ளும் கௌரவத்தைப் பாராட்டுதல், பொருளாதாரவளத்திற்காக கருமங்களாற்றுதல் என்னும் நோக்கங்களை அடக்கிய சங்கஒழுங்குகளும், பழையமாணவர்கள் தங்கள்பிற்காலதேவைக்கெனப் பணம்சேமித்தல், அதனைஆதாயத்துடன் பெறுதலென்னும் நோக்கங்களை அடக்கிய இளைப்பாற்றிநிதிச் சங்க ஒழுங்குகளும் பரிசீலனைசெய்யப்பட்டு ஏகமனதாகநிறைவேறின.

காரியதரிசி

## நேர்த்தியின் பூர்த்தி

சதாசகாயமாதாவே, நீர் எனக்குச் செய்த அரும்பெரும்உபகாரத்தை எனது நாவினால் வர்ணிக்கமுடியாது. தாயே! சிலவருடங்களாக நான் பலவியாதிகளினால்வருந்தினேன். பலவைத்தியர்கள்என்னைப் பரிசோதித்துப்பார்த்து, பலமருந்துகளைக்கொடுத்திருந்தும் சுகமின்றியேவருந்தினேன். கடைசியாய் என்னைச்சோதித்த வைத்தியர் எனக்குச் சயரோகம்இருப்பதாகவும், காங்கேசன்துறைச் சயரோக ஆஸ்பத்திரிக்குப் போகுமாறும் அனுமதியிட்டார். அவரின்கட்டளைப்படி அந்த ஆஸ்பத்திரியில் சிலமாதங்கள்தங்கி வைத்தியம்செய்வித்தேன். வியாதியுமோவரவர ஏறிக்கொண்டுவந்தபடியால் எனது இவ்வுலகவாழ்வுமுடிந்ததென எண்ணினேன். அந்த ஆஸ்பத்திரிவைத்தியரும்எனதுவியாதியின் அகோரத்தைஅறிந்து நான்ஆஸ்பத்திரியிலேயே மரணிப்பதாகச் சொன்னார். அதனால், நான் அந்தியதேவதிரவிய அனுமானங்களையும் பெற்றுக்கொண்டேன். இச்சந்தர்ப்பத்தில் எனக்கோர் நல்லெண்ணம்தோற்றியது. அதாவது, மனிதரால்முடியாதது கடவுளால்ஆகுமென்பதே. ஆகையால், சதாசகாயமாதாவின்எண்ணம் என்மனதில் தோன்றியது. தாயே, நீர்தான் எனது தஞ்சமென்று வேண்டினேன். என்னஆச்சரியம்! எனதுசயரோகம் படிப்படியாகக்குறைந்துவந்து தற்போது எவ்வளவோசுகத்தை அனுபவித்துவருகிறேன். சதாசகாய உமது நாமம் [illegible]!

— S. A. S.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகரசபை

### சந்தைகள் குத்தகை 1958

கீழ்வரும் சந்தைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபைக் கொம்மிஷனரால் 4-11-57ஆம்திகதி பிற்பகல் 4-30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப்பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்குமுத்திரை யிடப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 4-11-57ஆம்திகதி பிற்பகல் 3 மணிவரை வழங்கப்படும்.

| சந்தைகளின் பெயர்கள் | கேள்விப் பத்திரத் தின்விலை | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்காகச் செலுத்தப்படவேண்டிய பெறுப்புப் பணம் | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்குமுன் நொத்தாரிஸ் உறுதிக்காகச் செலுத்தவேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| | ரூபா- சதம். | ரூபா- சதம். | ரூபா- சதம் |
| 1. பெரியகடை மரக்கறிச்சந்தை | 10—00 | 500—00 | 150—00 |
| 2. பெரியகடை மீன்சந்தை— பண்ணைஉட்பட | 10—00 | 250—00 | 150—00 |
| 3. சின்னக்கடைச் சந்தை | 10—00 | 250—00 | 150—00 |
| 4. செங்குந்தர் சந்தை | 10—00 | 250—00 | 150—00 |
| 5. அரியாலைச்சந்தை | 2—50 | 50—00 | ... ... |
| 6. முத்திரைச்சந்தை | 2—50 | 50—00 | ... ... |
| 7. கொழும்புத் துறைச் சந்தை | 2—50 | 50—00 | ... ... |
| 8. நாவாந்துறைச் சந்தை | 2—50 | 50—00 | ... ... |
| 9. பாசையூர்ச் சந்தை | 2—50 | 50—00 | ... ... |
| 10. நல்லூர்ச் சந்தை | 2—50 | 50—00 | ... ... |

இதரவிபரங்களை, கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்துமூலம் விண்ணப்பித்து அறியலாம்.

ஆ. வ. சின்னையா,
மாநகரசபைக் கொம்மிஷனர்,
யாழ்ப்பாணம் —இ—

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 19-10-57.

## TENDER NOTICE.

### Jaffna Municipal Council

### Lease of "Markets" — 1958.

Sealed Tenders on prescribed forms obtainable from the Municipal Office, Jaffna, will be received by the Municipal Commissioner, Jaffna, for the lease of the undermentioned "Markets" up to 4-30 p. m. on 4-11-57.

**Tender Forms will be issued up to 3 p. m. on 4-11-57.**

| Name of Markets | Cost of Tender Forms | Tender Deposit Payable to Obtain Tender Form | Fees payable before obtaining Tender Forms for Notarial Bond |
|---|---|---|---|
| | Rs. cts. | Rs. cts. | Rs. cts. |
| 1. GRAND BAZAAR VEGETABLE MARKET | 10-00 | 500-00 | 150-00 |
| 2. GRAND BAZAAR FISH MARKET INCLUDING PANNAI | 10-00 | 250-00 | 150-00 |
| 3. SMALL BAZAAR | 10-00 | 250-00 | 150-00 |
| 4. SENGUNTHAR MARKET | 10-00 | 250-00 | 150-00 |
| 5. ARIALAI MARKET | 2-50 | 50-00 | — |
| 6. MUTHIRAI SANTHAI | 2-50 | 50-00 | — |
| 7. COLOMBUTHURAI | 2-50 | 50-00 | — |
| 8. NAVANTHURAI | 2-50 | 50 00 | — |
| 9. PASSAIYOOR | 2-50 | 50-00 | — |
| 10. NALLORE MARKET | 2-50 | 50-00 | — |

Further particulars will be furnished on application in writing to the undersigned.

A. V. Chinniah,
Municipal Commissioner.

Municipal Office,
Jaffna, October 17, 1957.

● சமீபத்திலே ரோமாபுரியில் நடந்தேறிய இல்லறவாசிகளின் அப்போஸ்தலத்துவ இரண்டாவது சர்வதேசமகாநாட்டுக்குத் தமது நாட்டிலிருந்து சென்ற ஆறுபிரதிநிதிகளுக்கு எத்தியோப்பிய ஆகாயப்பிரயாணக்கம்பெனி இலவசபிரயாணவசதிசெய்யுமாறு எத்தியோப்பிய சக்கிரவர்த்தி ஹெயில் செலாசிஅவர்கள் உத்தரவிடலாயினர். இந்தஆறுபிரதிநிதிகளும் பிரயாணத்துக்குப் பணமில்லாது கஷ்டப்படுவதாகக் கேள்விப்பட்டதும் சக்கிரவர்த்தி அவ்விதம் உத்தரவுசெய்தார்.

● பிலிப்பைன்ஸ்நாட்டின் புதிய ஜனாதிபதியான கார்லோஸ் கார்சியா அவர்கள் தபசுகாலத்தின் கடைசியான மூன்றுவாரங்களிலும் உணவை முற்றாகத் தவிர்த்துவிட்டு உபவாசஞ்செய்து பழச்சாற்றைமாத்திரமேஅருந்திவரும் வழக்கமுடையவர்; தினமும் அவர் நெடுநேரம் தியானஞ்செய்வதிலும், சுவிசேஷத்தை வாசிப்பதிலும் செலவிடுகின்றாரென்று ஜெனறல் கார்லோஸ் றொமுலோ அவர்கள் தமது அமெரிக்க சுற்றுப்பிரயாணத்தின் போது தெரிவித்திருக்கின்றார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 30, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 24-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org